வலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 186 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 08 வெள்ளிக்கிழமை (23.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## இலங்கையின் பொருளாதாரத்தை சீர்திருத்த ஆதரவளிப்போம்



### ஐ.எம்.எப் பணிப்பாளர் ரணிலிடம் உறுதி

(பாரீஸ்)

இலங்கையின் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிப்பதில் அர்ப்புணிப்புடன் இருப்பதாக சர்வதேச நாணய 02

## ஹிட்லர் போன்று ரணில் செயற்படுகிறார்

### சரத் பொன்சேகா



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஹிட்லர் போன்று செயற்படுகிறார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். 15

# அதிகாரப் பகிர்வு தொடர்பில்

# ஜூலைக்குள் சாத்தியமான தீர்வு

## லண்டனில் ஜனாதிபதி ரணில்

(லண்டன்)

- தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்காக தொடர்ந்து உழைப்பேன்.
- வடக்குக் கிழக்கு காணிப் பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சி.
- காணாமல்போனோர் அலுவலக நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுப்பு.

லண்டனில் நடைபெற்ற சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் 40ஆவது ஆண்டு விழாவில் கனேடிய முன்னாள் பிரதமர் ஸ்ரீபன் ஹாபருடனான சந்திப்பின்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் 15




## யாழ். - மதுரை இடையில் விரைவில் விமான சேவை

### அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா



(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கும் மதுரைக்கும் இடையிலான விமான சேவை விரைவில் வாரத்தில் ஏழு நாட்களும் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என விமான சேவைகள் மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் 15

## கோட்டாபயவின் ஆட்சியினால் நாடு பின்நோக்கி சென்றுள்ளது

### பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ

(கொழும்பு)

கோட்டாபய ராஜபக்ஷவின் இரண்டரை வருடகால ஆட்சியில் நாடு ஒன்பது ஆண்டுகள் பின்னோக்கி சென்றுள்ளது.

பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தி நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியவர்கள் இன்று பொறுப்பில் இருந்து விலகும் வகையில் கருத்துரைக்கிறார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மை 02

## வல்லையில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வல்லை பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று நேற்று வியாழக்கிழ்மை காலை மீட்கப்பட்டது.

வல்லை - தொண்டைமானாறு வீதியில் உள்ள வெளியில் சட 15

## கிளிநொச்சியில் மர்மமான முறையில் ஒருவர் மரணம்

### பொலிஸார் விசாரணை

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மர்மமான முறையில் நபர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாக உள்ள ஏ9 வீதியின் அருகாமையில் அவரது சடலம் மீட்கப்பட் டுள்ளது.

குறித்த நபர் அப்பகுதியில் யாசகம் பெறுவர் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## பொருட்களின் விலைகள் அடுத்தவாரம் குறையும்

### வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ

(கொழும்பு)

சிமெந்து, மாபிள், இரும்பு, கோழி இறைச்சி மற்றும் வெதுப்பக உற்பத்திகள் உள்ளிட்ட பொருட்களின் விலைகளை, அடுத்த சில வாரங்களுக்குள் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக, வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதற்காக, வர்த்தமானி அறிவித்தல் மூலம், கட்டுப்பாட்டுவிலையை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வலயக்கல்விப் பணிப்பாளர்களாக

## யாழ்ப்பாணத்திற்கு ரவிச்சந்திரன் வலிகாமத்திற்கு பிரெட்லி

யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளராக பொ.ரவிச்சந்திரன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய முத்து இராதாகிருஸ்ணன் ஓய்வு பெற்ற நிலையில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய பொ.ரவிச்சந்திரன் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாள்ராக கடமையாற்றிய கே.பிரெட்லி ஜெனாட் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ம-7)

## நிறுத்தாத ஓட்டோ மீது துப்பாக்கிச் சூடு

(கராபிட்டிய)

கராபிட்டிய பகுதியில் முச்சக்கர வண்டியொன்றின் மீது பொலிஸார் நேற்று துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ள்னர்.

நிறுத்துமாறு பொலிஸாரினால் விடுக்கப்பட்ட உத்தரவிற்கு இணங்கத் தவறியமையினாலேயே இத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து முச்சக்கர வண்டியில் பயணித்த இருவர் தப்பிச் சென்றுள்ள நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## மின்சாரம் தாக்கியதில் தாயும் மகனும் உயிரிழப்பு

கொழும்பு- கடுவெல பிரதேசத்தில் மின்சாரம் தாக்கித் தாயும் மகனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தத் துயரச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

45 வயதுடைய தாயாரும், 22 வயதுடைய மூத்த மகனுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். வீட்டில் பழுதடைந்த குளிர்சாதனப் பெட்டியை மூத்த மகன் திருத்திக் கொண்டிருக்கும் போது தாயார் அருகில் இருந்துள்ளார்.

இதன்போது மின்சாரம் தாக்கி இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். (ம-7)

## புங்குடுதீவு கண்ணகி அம்மனின் மஹா கும்பாபிஷேகம் ஞாயிற்றுக்கிழமை

### எண்ணெய்க்காப்பு நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிகு புங்குடுதீவு கண்ணகி அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

கடந்த திங்கட்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பாகியுள்ள நிலையில் நேற்றுமுதல் எண்ணெய்க்காப்பு சாற்றுதல் ஆரம்பமாகி நாளை மதியம் 1 மணி வரை இடம்பெறவுள்ளது.

ஆனித்திங்கள் 10 ஆம் நாளான நாளை மறுதினம் அதிகாலை 5 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி 49 குண்டங்களோடு கூடிய மஹா யாகத்திற்கான மஹா பூர்ணாகுதி சமர்ப்பிக்கப்பட்டு விசேட பூஜைகள் இடம் பெறும்.

தொடர்ந்து சப்தமி திதியும் உத்தர நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய காலை 9.37 முதல் 11.00 வரையான சுப வேளைதனில் வேத திருமுறை பாராயணங்களோடு மங்கள வாத்தியங்கள் முழங்க இராஜ ராஜேஸ்வரி அம்பாளுக்கும் பரிவார தெய்வங்களுக்கும் புனாராவர்தன அஷ்டபந்தன சமர்ப்பண ஏகோன்ன பஞ்சாசத் மஹா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

இவ்வாலயம் இலங்கையிலேயே முதன் முறையாக 500 தூண்களும் 5 இராஜகோபுரங்களினையும் உடைய ஆலயமாக அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இருமுகம் கொண்டவர்களையே எதிர்க் கட்சித் தலைவர் நம்புகின்றார்

### ஹிருணிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

இரு முகங்கள் கொண்ட ஏமாற்றுக்காரர்களைத் தான் ஐக்கிய மக்கள் சக்தியின் உயர்மட்ட தலைமைகள் நம்புவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித்துடன் பகல் முழுவதும் இருந்து விட்டு இரவில் ஜனாதிபதியுடன் சேர்ந்து பொழுது போக்கும் சிலர் ஐக்கிய மக்கள் சக்தியில் இருக்கின்றனர். இந்த ஐக்கிய மக்கள் சக்தியினர் பாம்பு போன்றவர்கள். எவ்வாறாயினும் கட்சியுடன் உறுதியாயிருக்கும் எம்மை நம்புவதற்கு பதிலாக கட்சித் தலைவர் அவர்களைத் தான் நம்புகின்றார்.

"தயவுசெய்து பிரேமதாசவிடம் பேசி அவரை சரியான பாதையில் கொண்டு செல்ல முயற்சி செய்யுங்கள்" என கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்கவிடம் ஹிருணிகா தெரிவித்தார்.



"விக்கிரமசிங்கவைச் சந்திப்பவர்கள், தங்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இவர்கள் SJB பதவியில் இருந்து மீண்டும் பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டாலும் ஜனாதிபதியுடன் இணைவார்கள். அவர் என்னை அழைத்தால் நான் சில விஷயங்களைச் சொல்வேன் என அவருக்கு நன்றாக தெரியும் என்பதால் ஜனாதிபதி என்னிடம் ஒருபோதும் பேசுவதில்லை, என்று அவர் மேலும் கூறினார்.

ஆரம்பத்திலேயே பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ மற்றும் மனுஷ நாணயக்கார போன்றோர் கட்சி தாவிய போது ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருந்தால் யாருக்கும் ஜனாதிபதியுடன் இணையும் தைரியம் வந்திருக்காது என ஹிருணிகா தெரிவித்தார். (ம-7)


# பல ஆயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள் கல்யாண மாலை

சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :-

கல்யாண மாலை

இல.144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

Email : kalyanamalaijaffna@gmail.com


## இலங்கை...

நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிரிஸ்டலினா ஜோர்ஜிவா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான தனது சந்திப்பைத் தொடர்ந்து, இலங்கையர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முயற்சியில், பொருளாதார சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிக்க சர்வதேச நாணய நிதியம் உறுதிபூண்டுள்ளதாகவும் ஜோர்ஜிவா உறுதியளித்துள்ளார்.

"தற்போதைய பொருளாதார சவால்களை எதிர்கொள்ள இலங்கை அரசாங்கத்தின் வலுவான முன்னெடுப்புக்கள் வரவேற்கத்தக்கன. இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான பொருளாதார சீர்திருத்தங்களை ஆதரிப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதிய உலகளாவிய நிதியுதவி ஒப்பந்தத்திற்கான உலகத் தலைவர் உச்சிமாநாட்டில் உரையாற்றுவதற்காக, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் அழைப்பின் பேரில் நேற்று முன்தினம் புதன் கிழமை பரிஸ் சென்றடைந்த நிலையில் குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (ம-7)

## கோட்டா...

[illegible]களுக்கு ஆற்றிய உரை [illegible] ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றியதாவது,

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய தேசிய கடன் மறுசீரமைக்கப்படவுள்ளதாககுறிப்பிடப்படுவது அடிப்படையற்றதாகும். ஒட்டுமொத்த கடன்களையும் மறுசீரமைக்குமாறு சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டது.

தேசிய கடன்களை மறுசீரமைப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மார்ச் மாதம் 06 ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்துக்கு நிதியமைச்சர் என்ற ரீதியில் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். 2048 ஆம் ஆண்டு நாட்டை அபிவிருத்தி செய்வதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். பொருளாதார விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும். 2022 ஆம் ஆண்டு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி மற்றும் தனிநபர் ஒருவரின் வருமானம் 3400 டொலராக குறைவடைந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இரண்டரை வருட ஆட்சி காலத்தில் நாடு 09 ஆண்டுகள் பின்னோக்கி சென்றுள்ளது.

2048 ஆம் ஆண்டு நாடு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமாயின் ஒவ்வொரு ஆண்டும் பொருளாதார வள்ர்ச்சி வீதம் 6.5 சதவீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும்.

ஆகவே பொருளாதார முன்னேற்றத்தை அரசியல் காரணிகளை அடிப்படையாக கொண்டு குறிப்பிட முடியாது என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நல்லிணக்கம் சாத்தியமில்லை - ஐ.நா

(கொழும்பு)

**தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படும் கலாசாரம் இலங்கையில் நிலவுகின்ற வரை உண்மையான நல்லிணக்கமோ அல்லது நீடித்த சமாதானமோ சாத்தியமில்லை என ஐக்கியநாடுகளின் பிரதி மனித உரிமை ஆணையாளர் நடா அல் நசீவ் தெரிவித்துள்ளார்.**

இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரநெருக்கடி தொடர்ந்தும் இலங்கை மக்களின் உரிமை மற்றும் நலன்களின் மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

சர்வதேச நாணயநிதியம் இலங்கைக்கான நிதிஉதவிக்கு இந்த வருட ஆரம்பத்தில் அனுமதி வழங்கியுள்ளபோதிலும் இது முக்கியமான முதல் நடவடிக்கை இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளுடனான பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன.

சீர்திருத்தத்தின் சுமைகள் சமத்துவம் இன்மைகளை மேலும் அதிகரிக்காமலிருப்பதை உறுதி செய்வது மிகவும் அவசியம் என குறிப்பிட்டுள்ள ஐக்கியநாடுகளின் பிரதி மனித உரிமை ஆணையாளர் நடா அல் நசீவ் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளால் மிகவும் நலிந்த மக்களிற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளில் இருந்து அவர்களை பாதுகாப்பதற்கான பாதுகாப்பு வலையமைப்புகள் அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்

துரதிஸ்டவசமாக மிகவும் ஆபத்தான சட்டங்கள் எதிரணியினரை கட்டுப்படுத்துவதற்கும் சிவில் சமூகத்தின் செயற்பாடுகளை முடக்குவதற்கும் பயன்படுத்தப்படுவதை கடந்த மாதங்களில் பார்க்க முடிந்துள்ளது.

ஆர்ப்பாட்டங்களிற்கு எதிராக அநேகமான தருணங்களில் கடுமையான நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

ஆர்ப்பாட்ட தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களை கைதுசெய்வதற்கான பலவந்தமான முயற்சிகள் இடம்பெறுகின்றன. பொலிஸாரின் நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக இராணுவத்தினர் பயன்படுத்தப்படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணனின் மணிவிழா நாளை

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர் முத்து.இராதாகிருஷ்ணன் அவர்களின் மணிவிழா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி அதிபர் சி.திரிகரன் தலைமையில் இடம்பெறும் இவ் விழாவில் ஆசியுரைகள், வாழ்த்துரைகள் இடம்பெறவுள்ளதுடன் விழா நாயகனை கௌரவித்து "இராதாகிருஷ்ணோவியம்" எனும் மணிவிழா சிறப்பு மலர் வெளியீடும் இடம் பெறவுள்ளன. (நி)

## உருளைக்கிழங்குடன் ஹெரோயின்

(கொழும்பு)

பாகிஸ்தானில் இருந்து கிழங்கு இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன் ஒன்றில் இருந்து பெருந்தொகையான ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

இலங்கை சுங்க பிரிவு நடத்திய சோதனையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது. குறித்த கொள்கலனில் இருந்து 16 கிலோகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கம் குறிப்பிட்டுள்ளது. (நி)

## வடக்கு - கிழக்கில் அமைந்துள்ள விகாரைகளை பாதுகாக்க மகாநாயக்க தேரர்கள் முன்வர வேண்டும்

### எல்லாவல மேதானந்த தேரர் வேண்டுகோள்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள விகாரைகளைப்பாதுகாக்கும் நடவடிக்கைகளில் மகாநாயக்கர்கள் முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.தொல் பொருள் ஆய்வு தொடர்பில் எல்லாவல மேதானந்த தேரர் இந்த வேண்டுகோளை முன் வைத்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள விகாரைகளின் உரிமை தொடர்பாக முறையான திட்டம் ஒன்று நிகாயக்களின் உச்சபீடத்துடன் கலந்தாலோசித்து தயாரிக்கப்பட வேண்டுமென அவர் கடிதம் ஒன்றின் மூலம் மகாநாயக்க தேரர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் வழிபாட்டுச் சிதைவுகள் உள்ள இடங்களின் உரிமைகளுக்காக பிக்குகள் தன்னிச்சையாக செயற்பட்டால் பிரச்சினைகள் ஏற்படும்.

இவ்வாறு செயற்படும் போது, புராதன பொக்கிஷங்கள் அழிந்துபோவதுடன், பிக்குகள் மத்தியில் எதிர்ப்பும் கிளம்பும் என்று கூறும் அவர் மகாநாயக்கரின் அறிவு மற்றும் வழிகாட்டலின் கீழ் அவ்வாறான இடங்களை பாதுகாக்க வேண் டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (நி)

## முட்டை விலையை குறைக்க மூன்று மாதங்கள் ஆகும்

### விவசாய அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலையை குறைக்க இன்னும்மூன்று மாதங்கள் ஆகும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு முட்டைகளை இறக்குமதி செய்வதல்ல, கால்நடை வளர்ப்புத்திட்டத்தை வெளிநாட்டு சந்தைக்கு வழங்கும் திட்டமாக மாற்றுவதே தமது நோக்கம் எனவும் விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முட்டையின் விலை 50 ரூபாவைத் தாண்டியுள்ளதுடன், ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலையும் 1,600 ரூபாவைத் தாண்டியுள்ளதாகவும் ஊடக சந்திப்பில் கேள்விகள் எழுந்த நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். (நி)

# 4ம் ஆண்டு நினைவலைகள்



மண்ணுலகில் 1956 - 02 - 27

விண்ணுலகில் 2019 - 06 - 23

அமரர்.கிருஸ்ணபிள்ளை செல்வநாயகம் (தங்கக்கிளி)

தங்கமாய் அவதரித்தீர் அன்பின் கருவில்
தங்கமான உம் அரவணைப்பில் தழைத்தோம் நாங்கள்
எம் குடும்பத்தின் அரணாய் பெருவிருட்சமாய் நின்று
நிழல் தந்த தலைவன் நீங்கள் இன்று வழிகாட்ட நீ இல்லை
வெறுமையாய் உணர்கின்றோம் நம் வாழ்வை
என்றும் எங்கள் வலி சுமந்த உன்னதனே
இன்பத்திலும் துன்பத்திலும் எம் விழியோரம்
வழிகின்ற கண்ணீர்த் துளிகள் சொல்லும் உம் நினைவுகளை
ஆண்டுகள் நான்கு சென்றதை நம்ப முடியவில்லை
நான்கல்ல நம் தலைமுறை உள்ளவரை
உங்கள் நினைவுகள் எம்மனதில் நீங்காது நிலைத்திருக்கும்
அன்பானவனே உன் பெயரும் புகழும் என்றும் ஜொலிக்கும் தங்கமாய்

புதுவளவு,
பொலிகண்டி தெற்கு,
வல்வெட்டித்துறை.

(16056)

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## விசா காலத்தை மீறி தங்கியுள்ள வெளிநாட்டவர்களுக்கு விதிக்கப்படும் அபராதம் அதிகரிப்பு

(கொழும்பு)

விசா காலத்தை மீறி தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களுக்கு விதிக்கப்படும் அபராதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான அறிவிப்பினை பொது பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது.

அபராதத்தை 7-14 நாட்களுக்கு 250 அமெரிக்க டொலர்களாகவும் 14 நாட்களுக்கு மேல் 500 அமெரிக்க டொலர்களாகவும் உயர்த்தியுள்ளது. அபராதத்துடன், விசா கட்டணமும் செலுத்தப்பட வேண்டும் என வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட்

# றொசாந்தின் இரட்டை சதத்துடன் மகாஜனக் கல்லூரி வெற்றி




சிறிலங்கா பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் 11 வயதிற்குட்பட்டோருக்கான பிரிவு III கிரிக்கெட் தொடரை மாவட்ட ரீதியாக நடத்தி வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி, மகாஜனக் கல்லூரியும் போட்டியில் கலந்து கொண்டன.

இப்போட்டி 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட போட்டியாக நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 50 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 524 ஓட்டங்களைப் பெற்றது.

ஜோவேல் றொசாந்த் 132 பந்துகளில் 237 ஓட்டங்களைப் பெற்றார். இப்போட்டியின் மூலம் ஒரு கல்லூரி ஆகக் கூடிய ஓட்டங்களைப் பெற்றமையும் ஓர் தனிநபர் பெற்ற ஆகக்கூடிய ஓட்டங்கள் பெற்றன.

அணித்தலைவர் துளசிகன் 58, மொகமட் றிலி 54 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 18.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 77 ஓட்டங்களைப்பெற்றது.

அணித்தலைவர் துளசிகன், வகீசன் தலா 4 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டிக்கு ஞானதயாளன், குமரேசன் ஆகியோர் மத்தியஸ்தர்க்ளாகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (4)






இலங்கை தேசிய அணி மற்றும் இந்திய தேசிய அணிகளுக்கிடையிலான கராத்தே போட்டியில் வடமாகாண வீராங்கனை ரி.சாணுயா வெண்கலப் பதக்கத்தினைப் பெற்று வடமாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். வடமாகாணத்தில் இருந்து முதல் தடவை இலங்கை தேசிய அணி சார்பாக இந்திய தேசிய அணியுடன் போட்டியிட்ட மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல குறித்த மாணவி இலங்கைக்கும் வடமாகாணத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். இவ்வீராங்கனையை பயிற்றுவித்தவர் சிகான் கே.எஸ்.விஜயராஜ் என்பது குறிப்பிடத்தக்கது.

# போட்டிக்கான இடங்களை மாற்ற முடியாது பாகிஸ்தானின் கோரிக்கை நிராகரிப்பு

13 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி ஒக்டோபர்-நவம்பர் மாதங்களில் இந்தியாவில் நடைபெறவுள்ளது. 10 நாடுகள் பங்கேற்கும் இந்த போட்டிக்கான அதிகார பூர்வ அட்டவணை இன்னும் வெளியிடப்படவில்லை.

இதற்கிடையே உலகக் கிண்ண போட்டிக்கான வரைவு அட்டவணை வெளி யாகி இருந்தது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் இதை சர்வதேச கிரிக் கெட் கவுன்சிலுக்கு அனுப்பி வைத்து இருந்தது. பாகிஸ் தான் அணி மோதும் போட்டி களும் வெளியாகி இருந்தது.

இதில் சென்னை, பெங்களூரில் நடைபெறும் போட்டிக்கான இடங்களை மாற்று மாறு ஐ.சி.சியிடம் பாகிஸ் தான் கிரிக்கெட் வாரியம் வேண்டுகோள் விடுத்தது. பாகிஸ்தானின் இந்த கோரிக் கையை ஐ.சி.சி.யும் பி.சி.சி.யும் நிராகரித்துள் ளது.

இது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் நிர்வாகிகளும் இந்திய கிரிக்கெட் வாரிய நிர்வாகிகளும் ஒன் றாக விவாதித்து இந்த முடிவை எடுத்தனர்.

2 இடங்களை மாற்ற இயலாது என்ற பாகிஸ்தானின் கிரிக்கெட் வாரியத்தின் கோரி க்கை நிராகரிக்கப்பட்டதால் உலகக் கிண்ண போட்டிக் கான அதிகார பூர்வ அட்ட வணை விரைவில் அறிவிக் கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொடக்க ஆட்டத்தில் இங்கிலாந்து-நியூசிலாந்து அணி கள் மோத உள்ளன. இந்திய அணி முதல் ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவை ஒக்டோபர் 8 ஆம் திகதி சென்னையில் சந்திக்கிறது.

இந் தியா-பாகிஸ் தான் மோதும் ஆட்டம் ஒக்டோபர் 15 ஆம் திகதி அகமதாபாத் தில் நடைபெறவுள்ளது. (4)

# இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது குருநகர் பாடும்மீன் அணி



நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தினால் வடமாகாண ரீதியில் நடத்தப் படும் சென்.மேரிஸின் மகுடம் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட அரையிறுதிப்போட்டியில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சஸ் வி.க மோதிக்கொண்டது.

போட்டியில் 1-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது பாடும்மீன் அணி.

போட்டியின் வெற்றிக் கோலினை அணிக்காக யோன் பெற்றுக் கொடுத்ததுடன் இப்போட்டியின் ஆட்ட நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார். (4-6-106)

# றொனால்டோவுக்கு கின்னஸ் சாதனை சான்றிதழ்




ஐரோப்பிய கால்பந்து போட்டி அடுத்த ஆண்டு ஜூன் 14 முதல் ஜூலை 14 வரை ஜேர்மனியில் நடைபெறும்.

இதற்கான தகுதி சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஐஸ்லாந்து தலைநகர் ரெய்க்ஜவிக்கில் நடந்த யூரோ தகுதி சுற்று போட்டி ஒன்றில் போர்த்துக்கல்- ஐஸ்லாந்து அணிகள் மோதின.

போர்த்துக்கல் நாட்டை சேர்ந்த உலகின் முன்னணி கால்பந்து வீரரான கிறிஸ்டியானோ றொனால்டோ இதில் விளையாடினார். அவருக்கு இது 200 ஆவது சர்வதேச போட்டியாகும். இதன் மூலம் றொனால்டோ புதிய சாதனை படைத்தார்.

200 சர்வதேச போட்டிகளில் ஆடிய முதல் வீரர் ஆவார். போர்த்துக்கல் நாட்டுக்காக 200 போட்டிகளில் விளையாடிய 38 வயதான அவருக்கு கின்னஸ் சாதனை சான்றிதழ் வழங்கப்பட்டது.(4)

# ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசையில் அஸ்வின் முதலிடத்தில் நீடிப்பு




டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

இதில் பட்ஸ்மேன்கள் தரவரிசையில், இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

சமீபத்தில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் முதல் டெஸ்ட் பேர்டடியில் முதல் இன்னிங்சில் சதம் மற்றும் 2 ஆவது இன்னிங்சில் 46 ரன்கள் எடுத்து சிறப்பாக விளையாடியதால், அவர் 887 புள்ளிகளுடன் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

முதலிடத்தில் இருந்த அவுஸ்திரேலிய வீரர் லபுசேன் முதலிடத்தில் இருந்து 3 ஆவது இடத்திற்கு பின்தங்கினார். நியூசிலாந்து வீரர் கேன் வில்லியம்சன் 2 ஆம் இடத்திலும் அவுஸ்திரேலிய வீரர் டிராவிஸ் ஹெட் 4 ஆவது இடத்திலும் உள்ளனர். டாப்-10 பட்டியலில் ஒரே ஒரு இந்திய வீரர் மட்டுமே உள்ளார்.

இந்திய வீரர் ரிஷப் பண்ட் 10 ஆவது இடத்தில் உள்ளார். இந்தியாவின் நட்சத்திர வீரர் விராட் கோலி ஒரு இடம் பின்தங்கி, 14 ஆவது இடத்தில் உள்ளார். கப்டன் ரோகித் சர்மா 12 ஆவது இடத்தில் உள்ளார். டெஸ்ட் பந்துவீச்சாளர் தரவரிசையில் இந்தியாவின் ரவிச்சந்திரன் அஸ்வின் 860 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார்.

ஜஸ்பிரித் பும்ரா மற்றும் ரவீந்திர ஜடேஜா ஆகியோர் முறையே 8 ஆவது மற்றும் 9 ஆவது இடங்களில் நீடிக்கின்றனர்.

ஓல்ரவுண்டர் தரவரிசையில் ரவீந்திர ஜடேஜா 434 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார். அஸ்வின் 2 ஆவது இடத்திலும் அக்சர் பட்டேல் 4 ஆவது இடத்திலும் உள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி தராவிட்டால் பதவி விலகுவேன்

## சுகாதார அமைச்சர் அதிரடி



(கொழும்பு)

மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு தேவையான நிதியை பெற்றுக் கொடுக்காவிட்டால் அமைச்சர் பதவியை இராஜினாமா செய்வதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். நேற்று பாராளுமன் றத்தில் உரையாற் றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு வைத்திய சாலைகளில் சர்ச்சையில் இருக்கும் மயக்க மருந்து தொடர்பான நிலைமையை விளக்கிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நீதிமன்றம் எடுத்த சில முடிவுகளால் எங்களுக்கு சில பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இன்னொரு காரணம் பணப்பிரச்சினை. இதைச் சமாளிக்க முடியாவிட்டால், நான் அதை இந்த சபைக்கு அறிவிப்பேன்.

இது போன்ற குறையை என்னால் ஈடுசெய்ய முடியவில்லை என்றால், இனி எந்த பதவியையும் வகிக்கும் நம்பிக்கை இல்லை. (நி)

# வேலைவாய்ப்பிற்காக லட்சக்கணக்கில் வெளியேறும் இலங்கையர்கள்

(கொழும்பு)

இந்த வருடம் இலட்சக் கணக்கான இலங்கையர்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப எதிர்பார்த்துள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அதன்படி சுமார் 3 லட்சம் இலங்கையர்களை வெளிநாடுகளுக்கு வேலைக்கு அனுப்ப எதிர் பார்த்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

41 நாடுகளில் இருந்து 1.2 மில்லியனுக்கும் அதிகமான வேலைவாய்ப்பு அனுமதிகள் கிடைத்துள்ளன. திறன் மற்றும் மொழித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நபர்களுக்கே பெரும்பான்மையான வேலைவாய்ப்புகளை வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும்.

திறன் மற்றும் மொழிப் பயிற்சிகளை வழங்கு வதன் மூலம் இலங்கை யர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு தயார் ப்படுத்துவதற்கு அமைச்சு மேலதிக நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறது என சுட்டிக்காட்டியுள் ளார். (நி)




# இராசிபலன்

23.06.2023
ஆனி 08, வெள்ளிக்கிழமை
பஞ்சமி முன்னிரவு 6.31 மணிவரை
மகம் முழுவதும்

சுபநேரம் -5.54-7.24 மணிவரை
இராகுகாலம்-10.24-11.54 மணிவரை
மாணிக்கவாசகர் குருபூசை

சந்திராஷ்டமம்-
உத்தராடம்

வளவன்


**மேஷம்**

புண்ணி காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் குடும்ப பொறுப் புணர்ந்து நடந்து கொள்வர், வழிபாடு திருப்தி தரும், இனிமையான நாள்.


**ரிஷபம்**

தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


**மிதுனம்**

இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கொடுக்கல் -வாங்கல்கள் ஒழுங்காகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


**கடகம்**

குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.


**சிம்மம்**

நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்கள் அறிந்து கொள்வீர்கள், இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.


**கன்னி**

சுப விரயங்கள் கூடும் நாள், அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயம் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


**துலாம்**

அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம்.


**விருச்சிகம்**

தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.


**தனுசு**

உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், [illegible] கைகூடும்.


**மகரம்**

சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.


**கும்பம்**

மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.


**மீனம்**

உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும், உறவு பகைபாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் மிகப்பெரிய இலட்சியம் அறிவல்ல செயல்தான்.

# கண்காட்சி நிகழ்வும் ஆண்டு விழாவும்

(சாவகச்சேரி)

ரி.பி.ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக்கூடத்தின் ஆண்டு விழாவும் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் "துலங்கும் வர்ணங்கள்" கண்காட்சி நிகழ்வும் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரியில் அமைந்துள்ள ரி.பி.ஹன்ற் ஓவியக் கூடத்தில் இடம்பெறவுள்ளன.

ஓவியக்கூடத்தின் ஸ்தாபகர் திருமதி யோகமணி அழகரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எல்.இளங்கோவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் சிறப்பு விருந்தினராக மருதனார்மடம் சேர் பொன்னம்பலம் இராமநாதன் கலைபீட பீடாதிபதி சி.சிவரூபனும் கௌரவ விருந்தினர்களாக தென்னிந்திய திருச்சபை பேராயர் கலாநிதி வே.பத்மதயாளன், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.கைலாசநாதன், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபர் திருமதி. எல்.முகுந்தன், bridge அக்கடமி இயக்குநர் ஸ்ரீசுடரோன் மற்றும் சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் போதகர் வசந்தகுமார் அடிகளார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (4-6-30)



யாழ்ப்பாணம்- தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினால் திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் நேற்று முன்தினம் புதன்கிழமை உதவித்திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அந்தவகையில் திருகோணமலை -செல்வநாயகபுரம் பிரதேச மருத்துவமனையில் மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் மருத்துவமனையின் கோரிக்கைக்கு அமைவாக 505,400 ரூபாய் பெறுமதியான மருந்து வகைகள் கையளிக்கப்பட்டன. அதேவேளை வவனியா கல்லாறு ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலயத்திற்கு 440,520 ரூபாய் நிதிப்பங்களிப்பில் குழாய்க்கிணறு அமைத்து குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. (படம்:-சுபேசன்)

# மலையக மக்களின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் விசேட நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம் பெறவுள்ளது.

மலையக மக்களின் வாழ்வியல் சவால்களை வெளிப்படுத்தும் மலையக மக்களின் கலை வெளிப்பாடுகளாக "புறக்கணிக்கப்பட்ட மலைகள்" என்ற தலைப்பில் கிசோகுமாரின் புகைப்படக் கண்காட்சியும் "தேயிலை சாயம்", எனும் தலைப்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் புகைப் படங்களின் கண்காட்சியும் இன்று தொடக்கம் 25 வரை, யாழ்ப்பாணத்தில் உள்ள ரிம்மர் மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை காட்சிப்படுத்தப்படவுள்ளன.

மேலும் யாழ்ப்பாணம் 286, பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நாளை மறுதினம் 25 ஆம் திகதி மாலை 3 மணிக்கு டிக்கோயா நுண்கலைக் கல்லூரி வழங்கும் நாட்டிய நாடகம் மற்றும் பொதுக்கூட்டம் என்பனவும் இடம்பெறவுள்ளன. (4-6-30)

# திருவாசக முற்றோதலும் குருபூசை தினமும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு திருவாசக முற்றோதல் இடம்பெறும் தொடர்ந்து மாணிக்கவாசக சுவாமிகள் குரு பூசையை முன்னிட்டு மாணிக்க வாசக சுவாமிகள் வீதியுலா நடைபெறும். (4-6)


# பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவங்களை சங்க வேலை நாட்களில் கடமை நேரத்தில் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 20.00 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் தலைவர், பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை. என்ற முகவரிக்கு 06.07.2023 ஆம் திகதிக்கு முன்னர் நேரில் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

1. **பதவி:- பொதுமுகாமையாளர்**

சம்பள குறியீட்டு இல :- 101/08 சம்பள அளவுத்திட்டம் :- 20665-260X10-280X10-26065 (கூ.உ.ஆ.சு.நி 02/2022):- 247980-3120X10-3360X10-312780

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

**அ)** கூட்டுறவு ஊழியர் 9 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/மேற்பார்வை நிலைப்பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை /மேற்பார்வை நிலைப்பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

**ஆ)** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம்/அதற்கு சமமான இத்தகைமையானது கணக்கியல்/ வியாபாரப் புள்ளிவிபரவியல்/ வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/முகாமைத்துவம்/வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

**அல்லது**

**இ)** கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக /கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம் / க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.

2. **பதவி:- கணக்காளர்**

சம்பள குறியீட்டு இல :- 104/09 சம்பள அளவுத்திட்டம் :- 20200-250X10-260X10-25300 (கூ.உ.ஆ.சு.நி 02/2022):- 242400-3000X10-3120X10-303600

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

**அ)** கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணக்காளர்/உள்ளக கணக்காய்வாளர்/ கணக்குப் பதிவாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் /கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் உள்ளகக் கணக்காய்வாளர்/கணக்குப்பதிவாளர் கணக்கு அல்லது கணக்காய்வு எழுதுநர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

**ஆ)** இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா /இதற்குச் சமமான தகைமை/ மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால் /தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் NICD நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

**அல்லது**

**இ)** கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல் /கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக /கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் /கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல் /கணக்காய்வுத் துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம் /அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் 04 ஆண்டு கால அனுபவம்.

**பொது நிபந்தனைகள்**

1. வயது 06.07.2023 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாதவர்களாகவும் 45 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்தல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
3. நியமனத்தின் போது சுற்றுநிருபத்திற்கமைவாக ரொக்க பிணை செலுத்துபவராக இருத்தல் வேண்டும்.
4. ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
5. சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

**தலைவர்,**
**பருத்தித்துறை பல.நோ.கூ.சங்கம்,**
**1ம் குறுக்குத்தெரு,**
**பருத்தித்துறை.**

(c-6795)


# 22 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது



(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 22 இந்திய மீன வர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு அருகே நேற்று முன்தினம் இரவு இந்திய மீன வர்கள் மீன்பிடியில் ஈடுபட்ட போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் 4 படகையும் அதிலிருந்த 22 மீனவர்களை யும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை காங்கேசன்துறைக்கு அழைத்து வந்து விசாரணைகளுக்கு பின்னர் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4-6-33)

# விடத்தற்பளையில் வீதியோரம் வெடிபொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)



கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விடத்தற்பளை கரம்பகம் பகுதியில் நேற்று வியாழக்கிழமை வீதியோரம் பையில் கட்டப்பட்ட நிலையில் வெடிபொருட்கள் சில அடையாளம் காணப்பட்டுள்ளன.

பையில் கட்டப்பட்ட நிலையில் வெடிபொருட்கள் காணப்பட்ட நிலையில் அது தொடர்பாக கொடிகாமப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு வெடிபொருட்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மேற்படி வெடிபொருட்கள் இரவு வேளையில் குறித்த பகுதியில் கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகி... (4-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களிடையே அதிகரிக்கும் காசநோய்

### சீமாட்டி ரிட்ஜ்வே மருத்துவமனை புள்ளி விபரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் காசநோயினால் பாதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.**

இது தொடர்பாக கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனை அறிக்கை யொன்றை வெளியிட்டு ள்ளது.

குறித்த அறிக்கையில் இந்த ஆண்டின் முதல் காலாண்டில் காசநோயினால் பாதிக்கப்பட்ட 59 சிறுவர்கள் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் கொழு ம்பைச் சேர்ந்தவர்கள் என தெரியவருகிறது.

கடந்த ஆண்டின் முதலாம் காலாண்டில் 49 சிறுவர்களே காசநோயினால் பாதிக்கப்பட்ட நிலையில் இனம்காணப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் மொத்தமாக 187 சிறுவர்கள் காசநோயினால் பாதிக்கப்பட்ட நிலையில் கடந்த ஆண் டில் கண்டறியப்பட்டிருந்தனர்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள விசேட மருத்துவ நிபுணர் சன்ன டி சில்வா, கர்ப்பத்தில் இருக்கும் போதே சிறுவர்களுக்கு காசநோய் தொற்றுவதற்கான வாய்ப்பு இருப்பதாவும் அவ்வாறு நோய் தொற்றிய ஒரு வயதுக்கும் குறைவான குழந்தைகள் உயிராபத்தை எதிர் கொள்ளக் கூடும் என்றும் எச்சரித்துள்ளார். (நி)




சேவை நலன் பாராட்டு
திருமதி.
சிவகௌரி பாக்கியராஜா
ஆசிரியை
பயிற்றப்பட்ட சித்திரம்(விசேட) (SLTS-I)
சேவை விபரம்
யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி
26.03.1990-28.02.1996
வ/வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம்
01.03.1996-06.07.2005
யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி
07.07.2005-14.02.2015
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி
16.02.2015-23.06.2023

எமது கல்லூரியின் சித்திரப்பாட ஆசானாய் சிறப்புடன் பணியாற்றி உளமகிழ்வுடன் பணி நிறைவு காணும் இந் நன்னாளில் உங்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு உங்கள் ஓய்வுக்காலம் சிறப்புறவும் இறை ஆசியையும் வேண்டி நிற்கின்றோம்.

வாழ்க வளமுடன் பார் போற்ற
வளர்க நின்புகழ் வையகத்தே.
(16053)

வாழ்த்துவோர்– ஆசிரியர் நலன்புரிக்கழகம்.
யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி.யாழ்ப்பாணம்.


# பாடசாலைகளில் இனி ஜப்பான் மொழிக் கற்கை

(கொழும்பு)

எதிர்காலத்தில் தரம் 6 ஆம் வகுப்பிலிருந்து இருந்து ஜப்பான் மொழிக் கற்கை ஆரம்பமாகவுள்ளது என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், நாட்டின் முன்னேற்றம் கருதி அமைச்சரவை அனுமதியுடன் கல்வி அமைச்சுடன் சேர்ந்து ஜப்பான் மொழியை கற்பிக்க அனுமதி பெறப்பட்டுள்ளது.எனவே இதற்கமைய தரம் 6இல் இருந்து ஜப்பான் மொழி எதிர்வரும் காலங்களில் கற்பிக்கப்படவுள்ளது.இதனூடாக எதிர்காலத்தில் மாணவ கல்வியின் முன்னேற்றத்திற்காக வெளிநாடுகளுக்கு செல்லகூடிய வழியை காட்டவே இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (நி)


# கல்யாணமாலை சர்வதேச இலவச திருமண சேவை

## மணமகள் தேவை

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா:26
உயரம்:169 cm
தகைமை/தொழில்:BSc Electrical Engineer
எதிர்பார்ப்பு: Engineer/அரச உத்தியோகம்.
தொ.இ: B/13751

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பூசம்
உயரம்: 5' 10"
தகைமை/தொழில்: BSc Civil engineer
எதிர்பார்ப்பு: தனியார் தொழில்/ அரச உத்தியோகம்.
தொ.இ: B/13757

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா:14
உயரம்:170 cm
தகைமை/தொழில்: BSc Computing Information Lecturer (அரச)
எதிர்பார்ப்பு:பட்டதாரி/ விரிவுரையாளர்
தொ.இ: B/13759

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம் : கேட்டை
கி.பா: 11 3/4
உயரம் : 5' 10"
தகைமை/தொழில்: GAQ காவலாளி (அரச)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/13761

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா:5' 8"
தகைமை/தொழில்:A/L Germany
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/13766

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா:33
உயரம்: 170 cm
தகைமை/தொழில்: HNDE Civil engineer (private)
எதிர்பார்ப்பு: வெளிநாடு/ அரச தொழில்
தொ.இ: B/13772

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா:26
உயரம்:5' 10"
தகைமை/தொழில்: O/L Store manager (pvt)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/13780

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம் : பூரட்டாதி
கி.பா: 18
உயரம் : 5' 8"
தகைமை/தொழில்: Diploma in ICT Bank
எதிர்பார்ப்பு: அரச. தனியார் தொழில்
தொ.இ: B/13782

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 38 3/4
தகைமை/தொழில்:PHD (Reading) Leturer (அரச)
எதிர்பார்ப்பு: BSc ற்கு மேற்பட்ட பட்டதாரி
தொ.இ: B/13785

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா:31
உயரம்: 5' 10"
தகைமை/தொழில்: BSc engineer (சிங்கப்பூர்)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/13786

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அனுஷம்
கி.பா:6
தகைமை/தொழில் பொறியியலாளர், சட்டத்தரணி Lecturer (தனியார்)
எதிர்பார்ப்பு:தொழில் பார்க்கும் பெண்
தொ.இ: B/13790

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம் : பூராடம்
உயரம் : 5' 7"
தகைமை/தொழில்: Software engineer Communication officer (தனியார்) (லண்டன்)
எதிர்பார்ப்பு: வணிகப் பட்டதாரி
தொ.இ: B/13791

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: பூராடம்
உயரம்:5' 9"
தகைமை/தொழில்:BSc Assistant Accountand
எதிர்பார்ப்பு:படித்த, தொழில் பார்க்கும் பெண்
தொ.இ: B/13792

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூரம்
உயரம்: 5' 7"
தகைமை/தொழில்: A/L சுவீடன் (விவாகரத்தானவர்)
எதிர்பார்ப்பு: விவாகரத்தான பெண்
தொ.இ: B/13796

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 63 3/4
உயரம்:5' 5"
தகைமை/தொழில் B .Engineer (லண்டன்)
எதிர்பார்ப்பு:பட்டதாரி
தொ.இ: B/13797

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம் : அனுஷம்
உயரம் : 5' 5"
தகைமை/தொழில்: O/L மொத்த விற்பனை நிலையம்
எதிர்பார்ப்பு: அரச. தனியார் உத்தியோகம்
தொ.இ: B/13799

கல்யாணமாலை, இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- Kalyanamalai.jaffna@gmail.com. அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை.
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை. பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 149

# தோற்றத்தை பார்த்து எடை போடாதே




'நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு' என எழுதிய பலகையை தனது கடையின் கதவுக்கு மேல் மாட்டி காட்சிப்படுத்தினார் அதன் உரிமையாளர்.

அந்த விளம்பரப் பலகை குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கும் என்று நினைத்தார்.

அதன்படியே ஒரு சிறுவன், கடையின் கதவில் காட்சிப்படுத்தப்பட்ட குறித்த விளம்பரத்தை பார்த்துவிட்டு கடை உரிமையாளரைப் பார்த்து "நாய்க்குட்டிகளை நீங்கள் என்ன விலைக்கு விற்கப் போகிறீர்கள்?"எனக் கேட்டான்.

1000 ரூபாயிலிருந்து 2000 ரூபாய் வரை என்று கடைக்காரர் பதில் சொன்னார்.

நான் நாய்க்குட்டிகளைப் பார்க்கலாமா? என்று கேட்டான் அந்தச் சிறுவன். கடை உரிமையாளர் புன்னகைத்தவாறு உட்பக்கம் திரும்பி விசிலடித்தார்.நாய்க் கூண்டிலிருந்து பந்துகளைப் போல ஐந்து நாய்க்குட்டிகள் ஓடி வந்தன.ஒரு குட்டி மட்டும் மிகவும் மெதுவாக வந்தது.

அந்தக் குட்டியை உடனே கவனித்த சிறுவன், என்னாச்சு அதுக்கு? என்று கேட்டான்.

அந்தக் குட்டி நாயைப் பரிசோதித்த கால்நடை மருத்துவர், அதற்குப் பிற்பகுதி சரியாக வளர்ச்சி அடையவில்லை.எனவே எப்போதும் முடமாகத்தான் இருக்கும் என்று கூறிவிட்டதாகக் கூறினார் கடைக்காரர். சிறுவனின் முகத்தில் ஆர்வம். "இந்தக் குட்டிதான் எனக்கு வேணும்" என்றான்.

"அப்படின்னா நீ அதுக்குக் காசு கொடுக்க வேணாம். நான்அதை உனக்கு இலவசமாகவே தர்றேன்" என்றார் கடைக்காரர்.அந்தக் குட்டிச் சிறுவனின் முகத்தில் இப்போது சிறு வருத்தம்.

கடைக்காரரின் கண்களை நேருக்கு நேராகப் பார்த்து விரல் நீட்டிச் சொன்னான்.

"நீங்க ஒண்ணும் எனக்கு இலவசமாகக் கொடுக்க வேண்டாம். மற்ற நாய்க் குட்டிகளைப் போலவே இதுவும் விலை கொடுத்து வாங்கத் தகுதியானது தான்.நான் இந்தக் குட்டிக்கு உரிய முழுத் தொகையையும் கொடுக்கிறேன்.

ஆனா, இப்போ எங்கிட்ட கொஞ்சப் பணம் தான் இருக்கு. மீதித்தொகையை மாதத் தவணை முறையில் தருகிறேன்" என்றான்.

ஆனாலும் கடைக்காரர் விடவில்லை. "இந்த நாய்க் குட்டியால் உனக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லை. இதால மற்ற நாய்க்குட்டிகளைப் போல ஓட முடியாது... குதிக்க முடியாது... உன்னோட விளையாட முடியாது." என்றார். உடனே, அந்தச் சிறுவன் குனிந்து தனது இடது கால் நீளக் காற்சட்டையை உயர்த்தினான்.வளைந்து, முடமாகிப் போயிருந்த அக்காலில் ஓர் உலோகப்பட்டை மாட்டப்பட்டிருந்தது.இப்போது அவன் கடைக்காரரை நிமிர்ந்து பார்த்துச் சொன்னான்.

"என்னாலும் தான் ஓட முடியாது...குதிக்க முடியாது. இந்தக் குட்டிநாயின் கஷ்டத்தைப் புரிஞ்சிக்கிறவங்க தான் இதுக்குத் தேவை என்று சொல்ல கடைக்காரரின் கண்களில் கண்ணீர் வழிந்து சிறுவனை அணைத்துக் கொண்டார்.

மனிதர்கள் நிறையப் பேர் வாழ்கிறார்கள் இவ்வுலகில். ஆனால் மனிதநேயத்துடன் வாழ்பவர்கள் எத்தனைப் பேர்...

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# இந்தியப் பிரதமர் மோடியின் ரசிகன் நான்

## எலான் மஸ்க் டுவிட்



(வோஷிங்டன்)

நான் பிரதமர் மோடியின் தீவிர ரசிகன் என உலகின் முன்னணி பணக்காரர்களில் ஒருவரும் டுவிட்டர் தலைமை நிர்வாக அதிகாரியுமான எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

3 நாள் அரசு முறைப் பயணமாக அமெரிக்காவிற்கு சென்றுள்ள பிரதமர் மோடி நியூயோர்க்கில் உலகின் முன்னணி பணக்காரர்களின் ஒருவரும் ஸ்பேஸ் எக்ஸ் டெஸ்லா மற்றும் சமூக ஊடக நிறுவனமான டுவிட்டரின் தலைமை நிர்வாக அதிகாரி யான எலான் மஸ்கை சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பிற்கு பின்னர் எலான் மஸ்க் தெரிவித்துள்ளதாவது:

"இந்தியாவுக்கு வர ஆவலாக உள்ளேன். அடுத்த ஆண்டு இந்தியாவுக்கு வர திட்டமிட்டுள்ளேன். நான் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் ரசிகன். பிரதமர் மோடி இந்தியாவிற்கு சரியான திட்டங்களை கொண்டு வர நினைக்கிறார்.

அவர் நாட்டின் மீது அதிக அக்கறை கொண்டுள்ளார். பிரதமர் மோடி புதிய நிறுவனங்களுக்கு ஆதரவாக இருக்க விரும்புகிறார்.

பிரதமர் மோடியுடனான சந்திப்பு சிறந்த அனுபவமாக இருந்தது. மேலும் இந்தியாவில் முதலீடு செய்ய பிரதமர் மோடி கேட்டுக் கொண்டுள்ளார். ஸ்பேஸ்.எக்ஸின் பிராட்பேண்ட் இணைய சேவையான ஸ்டார் லிங்கை இந்தியாவிற்கு கொண்டு வர திட்டமிட்டுள்ளேன். இது கிராமப்புற மக்களுக்கு உதவும்" என எலான் மஸ்க் தெரிவித்தார். (நி)

# சீன உண

# சுமார்

(பீஜிங்)

சீனாவின் வடமே
ஜின்சுவானில் உள்ள
ஒன்றில் ஏற்பட்ட வெடி
31 பேர் உயிரிழந்த
செய்திகள் தெரிவிக்கி

நேற்று முன்தினம் உணவகத்தில் எரிவாயு தொட்டி வெடித்து சிதறியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்

கப்
அ
அடு
மற்

# 6 ஆயிரம் ஆண்டுகள் பழை

## நாகரீக வரலாற்றை பறைசாற்றும் வெம்ப

(சென்னை)

கீழடியைத் தொடர்ந்து, விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையில் நடந்து வரும் அகழாய்வுகளால், வைப்பாற்றங்கரையில் 6 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான நாகரீகத்தின் வரலாறு வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கீழடி, சிவகலை, மயிலாடும்பாறை, கங்கை கொண்ட சோழபுரம் ஆகிய அகழாய்வுகளுடன் புதிதாக விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை, திருநெல்வேலி துலுக்கர்பர்ட்டி, தருமபுரி பெரும்பாலை என மொத்தம் 7 இடங்களில் அறிவியல் அடிப்படையில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படும் என கடந்த ஆண்டு சட்டப் பேரவையில் தற்போதைய நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்தார்.

இந்த அறிவிப்புக்கு வரலாற்று ஆய்வாளர்களிடம் பெரும் வரவேற்பு கிடைத்தது. விருதுநகர் மாவட்டத்தில் 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர்.



அந்தவகையில் வெம்பக்கோட்டையிலும் முதலாம் மற்றும் 2 ஆம் கட்ட அகழாய்வுகளில்

# ஐ.நா சபையில் பிரம்மாண்ட யோகா



(ஜெனீவா)

சர்வதேச யோக
தினத்தை முன்னிட்
ஐ.நா சபை வளாகத் தி
உள்ள புல்வெளியி
நேற்று முன்தின
பிரம்மாண்ட யோகாச
நிகழ்ச்சி நடைபெ
றது.

இந் நிகழ்ச்சிக்
இந்திய பிரதமர் ந
ந்திர மோடி தலை
தாங்கினார். இந்நிக
ச்சியில் ஐ.நா உ
அதிகாரிகள், பணி
ளர்கள் மற்றும் 18
இற்கும் மேற்பட்ட நா
களில் இருந்து வந்
ருந்த தூதர்கள் மற்று
முக்கிய பிரமுகர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# உணவகமொன்றில் வெடி விபத்து சுமார் 31 பேர் உயிரிழப்பு!

வடமேற்கு நகரமான உள்ள உணவகம் ட வெடிவிபத்தில் சுமார் யிரிழந்துள்ளதாக சீன தெரிவிக்கின்றன.



ண வடி த்து விக் கப்படுகின்றது.

அதேவேளை வெடிவிபத்தை அடுத்து உள்ளூர் தீயணைப்பு மற்றும் மீட்பு சேவைகள் 100 இற்கும் மேற்பட்ட நபர்களையும் 20 வாகனங்களையும் சம்பவ இடத்திற்கு அனுப்பியதாக அவசர கால மேலாண்மை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மீட்புப் பணிகள் நேற்று அதிகாலை 4 மணியுடன் முடிவடைந்ததாகவும் சீன செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)

## பழமையான வெம்பக்கோட்டை



வெம்பக் மற்றும் வுகளில் இதுவரை 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பழங்காலப் பொருட்கள் கிடைத்துள்ளன. (நி)

## அசாமில் வெள்ளப்பெருக்கு 108 கிராமங்கள் நீரினுள்



(டில்லி)

அசாமில் பெய்த கனமழை காரணமாக உண்டான வெள்ளத்தினால் 108 கிராமங்கள் நீரில் மூழ்கிய நிலையில் லட்சக்கணக்கான மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

அசாம் மற்றும் பூடானில் கடந்த சில நாட்களாக தொடர் கனமழை பெய்து வருவதால் பக்லாடியா ஆற்றில் அபாய அளவை கடந்து வெள்ளநீர் பெருக்கெடுத்து ஓடுகின்றது.

கடும் வெள்ளத்தினால் நல்பாரி மாவட்டத்தில் மட்டும் 44,707 பேர் பாதிப்படைந்துள்ளதுடன் 108 கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இந்த வெள்ளத்தினால் மக்கள் மட்டுமன்றி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் 1.07 இலட்சம் கால்நடைகள், வளர்ப்புப் பிராணிகள் மற்றும் கோழிப் பண்ணைகள் போன்றனவும் பாதிக்கப்பட்டுள்ளன. (நி)

## சிறைச்சாலையில் மோதல் 41 பேர் உயிரிழப்பு

(ஹோண்டுராஸ்)

மத்திய அமெரிக்க நாடான ஹோண்டுராஸில், தாமரா பகுதியில் உள்ள சிறைச்சாலையில் நேற்று முன்தினம் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் கலவரமாக வெடித்துள்ளது.

இதில் 41 பெண் கைதிகள் உடல் கருகி உயிரிழந்துள்ளனர் எனவும் 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் படுகாயமடைந்தவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

## யோகா நிகழ்வு

னீவா)

தேச . யோகா தை முன்னிட்டு, பை வளாகத்தில் புல்வெளியில் முன்தினம் ண்ட யோகாசன சி நடைபெற்

நிகழ்ச்கிக்கு பிரதமர் நரே மாடி தலைமை னார். இந்நிகழ் ஐ.நா உயர் ரிகள், பணியா மற்றும் 180 மேற்பட்ட நாடு இருந்து வந்தி ாதர்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்துகொண்டு யோகாசனம் செய்தனர்.

மேடையில் யோகா கலைஞர்கள் யோகாசனங்களை செய்ய, புல்வெளியில் அமர்ந்து பிரதமர் மோடி உள்ளிட்ட அனைவரும் யோகாசனம் செய்து பிரமிக்க வைத்தனர்.

இந்த யோகாசன நிகழ்ச்சியானது, கின்னஸ் சாதனை படைத்துள்ளது. அதிக நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்ற யோகா நிகழ்ச்சி என்ற உலக சாதனையை படைத்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

## பிரான்ஸ் தலைநகரில் பாரிய வெடி விபத்து!

- 35 பேர் படுகாயம்
- இடிபாடுகளுக்கிடையில் சிக்குண்டவர்களை மீட்கும் பணிகள் ஆரம்பம்



(பாரீஸ்)

பிரான்ஸ் தலைநகரில் ஐந்தாவது வட்டாரத்தில் அமைந்துள்ள கத்தோலிக்க பாடசாலை மற்றும் டிசைன் கல்லூரிக்கான கட்டடத்திலேயே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மத்திய பாரீஸில் இடம்பெற்ற வெடி விபத்தில் 35 பேர் படுகாயமடைந்துள்ளனர். இருவர் காணாமல் போயுள்ளனர் என தெரிவிக்கப்படும் நிலையில் மீட்புப் பணியாளர்கள் இடிபாடுகளின் மத்தியில் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

வெடிப்புச் சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் எரிவாயு மணத்தை உணர்ந்ததாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

வெடிப்பிற்கான காரணத்தை இன்னமும் தீர்மானிக்கவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குறிப்பிட்ட பகுதி சுற்றி வளைக்கப்பட்டுள்ளதுடன் இடிபாடுகளின் கீழ் சிக்குண்டிருக்கக்கூடியவர்களை கண்டுபிடிக்க மோப்ப நாய்களை பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னேரி, தேவன்கட்டுக் குளங்களை புனரமைக்க தலா 100 மில். ஒதுக்கீடு

(கண்டாவளை)

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தையும் தேவன்கட்டு குளத்தையும் புனரமைப்புக்காக CSIAP திட்டத்தினூடாக தல 100 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசன திணைக்களத்துக்கு உட்பட்ட வன்னேரிக் குளம் மற்றும் தேவன் கட்டுக்குளம் ஆகிய இரு குளங்களையும் இணைத்து இணைப்பதற்கான வேலைத்திட்டங்கள் நீர்ப்பாசன திணைக்களத்தனால் முன்னெடுக்கப்படவுள்ளன.

அந்தவகையிலே மேற்படி இரு குளங்களின் புனரமைப்பு பணிகளுக்காக தலா 100 மில்லியன் ரூபாய் விகிதம் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இரு குளங்களையும் இணைத்து புனரமைப்பதன் மூலம் விவசாயிகள் பெரிதும் நன்மை அடைவார்கள் என்றும் நீர்ப்பாசன திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-315)



இந்தியத் துணைத் தூதரகம், இலங்கை யோகாப் பயிற்சிக் கல்லூரியும் இணைந்து நடத்திய சர்வதேச யோகா தினம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ஆயிரத்து 400 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு யோகாப் பயிற்சி அளிக்கப்பட்டது.

## மணல் அகழ்வு அதிகரிப்பு

# ஒருங்கிணைப்பு கூட்டங்களில் பேசியும் பயனில்லை

### கிளி. பொது அமைப்புகள் குற்றச்சாட்டு

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் மாவட்டத்தில் நடைபெற்ற மூன்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் நீண்டநேரம் பேசப்பட்டாலும் தொடர்ந்தும் சட்டவிரோதமான முறையில் நாளாந்தம் 210 முதல் 260 கியூப் மணல் அகழ்ந்தெடுத்து வெளிமாவட்டங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதாக பொதுஅமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.**

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக்குளத்தின் அணைக்கட்டை அண்மித்த பகுதிகள், ஆற்றுப்படுக்கைகள் என்பவற்றில் தொடர்ந்தும் சட்டவிரோதமான மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதனால் எதிர் காலத்தில் குளம் பாரிய ஆபத்தை எதிர்நோக்கும் எனவும் இதனை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில் இவ்வாறு இடம்பெற்று வந்த மணல் அகழ்வுகள் இராணுவத்தினரின் உதவியுடன் கட்டுப்படுத்தப்பட்டதுடன் இராணுவ காவலரண் மற்றும் பொலிஸ் காவலரண் அமைக்கப்பட்டிருந்தமையால் குறித்த பகுதியில் மணல் அகழ்வுகள் நிறுத்தப்பட்டிருந்தன.

தற்போது குறித்த பகுதிகளில் இருந்த இராணுவ மற்றும் பொலிஸ் காவலரண்கள் அகற்றப்பட்டதன் பின் சட்டவிரோதமான மணல் அகழ்வுகள் மீளவும் இடம்பெற்று வருவதாகவும் எதிர்காலத்தில் குளம் பாரிய பாதிப்புகளை எதிர்கொள்ளும் அபாய நிலை இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (4-6-315)

## மன்னாரில் சமுர்த்தி பயனாளிகள் கவனயீர்ப்புப் போராட்டம்



(மன்னார்)

நலன்புரி நன்மைகள் சபையினால் வெளியிடப்பட்டிருக்கும் புதிய சமுர்த்தி பயனாளிகளை அடையாளப்படுத்தும் மதிப்பீட்டு அறிக்கையில் விடுபட்ட, மற்றும் உள்வாங்கப்படாத பயனாளிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்

நலன்புரி நன்மைகள் சபையினால் வெளியிடப்பட்டிருக்கும் பட்டியலில் பண வசதி உடைய மற்றும் மாடி வீடுகளில் வசிப்பவர்களும் உள்வாங்கப்பட்டிருப்பதாகவும் ஆனால் தேவையுடைய மாற்றுத்திறனாளிகள், விதவைகள், சிறுநீரக நோயாளிகள் உட்பட பலரின் பெயர் உள்ளடக்கப்படவில்லை எனவும் குறித்த பட்டியல் பொருத்தமற்றது என தெரிவித்தும் குறித்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

நாட்டில் ஏற்கனவே பொருளாதர நெருக்கடி விலைவாசி அதிகரிப்பினால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சஜித் பிரேமதாஸவின் வீட்டுத்திட்டத்தினால் கடனாளிகளாக உள்ளதாகவும் இன்னும் பல பெண்கள் நுண் நிதி நிறுவனங்களில் கடன் பெற்றே வாழும் இவ்வாறான நிலையில் சமுர்த்தி கொடுப்பனவு பட்டியலிலும் தங்கள் பெயர் நீக்கப்பட்டமை தங்களை ஏழ்மையில் தள்ள அரசாங்கம் மேற்கொள்ளும் வேலை எனவும் பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்து பிரதேச செயலகத்திற்கும் முன்பாக ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்களுடன் மன்னார் நகர் பிரதேச செயலாளர் கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன் புதிய நடைமுறை தொடர்பிலும் தெளிவுபடுத்திருந்தார்.

அதனை தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பிரதேச செயளாலர் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களின் கோரிக்கை தொடர்பில் தாங்கள் பரீசிலிப்பதாகவும் பட்டியலில் விடுபட்டு சமுர்த்தி பெறுவதற்கான தகுதியுடைய நபர்கள் மேன்முறையீட்டை மேற்கொள்ளுமாறும் தகுதி அற்ற ஆனாலும் சமுர்த்தி பட்டியலில் பெயர் குறிப்பிட்டுள்ள நபர்கள் எவரேனும் இருப்பின் அவர்கள் தொடர்பிலும் முறைப்பாடு வழங்கும்படி தெரிவித்தார். (4-6-285)

## கிளிநொச்சி கல்மடுநகரில் யானைகள் அச்சுறுத்தல் அதிகரிப்பு

### அச்சத்தில் மக்கள்

(தருமபுரம்)

கிளிநொச்சி கல்மடுநகர் பகுதியில் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இரவு வேளைகளில் வரும் யானைகள் தோட்டங்களுக்குள் புகுந்து வாழ்வாதார பயிர்களை அழித்து விட்டு செல்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (4-6-316)

## யாழ். பல்கலையில் இலங்கை நிதிசார் சங்கத்தின் மூன்றாவது வருடாந்த மாநாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிதிசார் சங்கத்தின் வளர்ந்து வரும் நிதிச்சந்தைகள் மற்றும் கொள்கைகள் தொடர்பான மூன்றாவது வருடாந்த மாநாடு இன்று 23 ஆம் திகதி SLFA நிர்வாகக்குழு உறுப்பினராகவுள்ள பேராசிரியர் ரதிராணி. யோகேந்திரராஜாவின் தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடத்தின் கேட்போர். கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜ மற்றும் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடபீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் பா. நிமலதாசன் ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இலங்கை நிதிசார் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக அதன் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கரீந்திர திசபண்டார, சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், பேராசிரியர் மஞ்சுள, கே.வன்னியாராச்சி றுகுண பல்கலைக்கழகம் மற்றும் ஏனைய பல்கலைக்கழக உறுப்பினர்கள் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருந்தூர் மலை தொடர்பில் இறுதி முடிவு எம்மால் எடுக்கப்படும்

## விதுர அடாவடி

**(கொழும்பு) முல்லைத்தீவு குருந்தி விகாரை மற்றும் திருகோணமலை திரிய விகாரை தொடர்பில் எந்த தரப்பினர் கருத்து தெரிவித்தாலும் அமைச்சினால் இறுதி முடிவு எடுக்கப்படும் என புத்தசாசன, சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.**

எந்த ஒரு அந்தஸ்திலும் உள்ள ஒருவருக்கு அதை மாற்றும் திறன் இல்லை என்றும் அமைச்சர் வலியுறுத்தியிருந்தார்.



முல்லைத்தீவு குருந்தி விகாரை மற்றும் திருகோணமலை திரியாய விகாரை தொல்லியல் துறைக்காக 5,000 ஏக்கர் காணிகளை இந்த ஆலயங்களுக்கு வழங்குவதாகக் கூறி காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

முல்லைத்தீவு குருந்தி விகாரைக்கு 2,000 ஏக்கர் நிலமும் திருகோணமலை திரிய விகாரைக்கு 3,000 ஏக்கர் நிலமும் கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வனவளத் திணைக்களம், காணி திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றுக்குச் சொந்தமான இவ்வளவு பெரிய காணியை விஞ்ஞானக் காணி எனக் கூறுவதன் அடிப்படை என்ன என்பதை உடனடியாகக் கண்டறிய வேண்டும் எனவும் அண்மையில் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் கிழக்கு தொல்பொருட்களை பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்ட படையும் அண்மையில் கலைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார். (நி)

## விவாகரத்து சட்டத்தில் திருத்தங்கள்

(கொழும்பு)

நவீன சமூகத்தினரின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் விவாகரத்து சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஊழலுக்கு எதிரான சட்டமூலம் மீதான விவாதத்தின் போது, அரச துறையில் பாலியல், இலஞ்சம் கோரும் விடயம் தொடர்பாக எழுப்பப் பட்ட கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (நி)


ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

7ம் ஆண்டு நினைவுதினம்

அன்னை மடியில் 20.08.1999

ஆண்டவன் அடியில் 23.06.2016



அமரர்.தேவராசா நிறோஜ்

ஏழாண்டு கடந்து போனாலும்
ஏழு யுகமே ஓடி முடிந்தாலும்
ஓயவில்லை எம் கண்கள் மட்டும்
நீ எம்மைப் பிரிந்தாலும் – உன்
நினைவுடனே நாம் வாழ்கின்றோம்.

23.06.2023 இன்றைய தினம் அன்னாரின் ஞாபகார்த்தமாக தாவடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் சனசமூக நிலையத்தில் காலை 8.30-3.30 மணி வரை இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது. ஆகவே இந்த உயிர் காக்கும் உன்னதப் பணியில் எங்களுடன் இணைந்து தங்களது பங்களிப்பை வழங்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

காளி கோவிலடி,
தாவடி வடக்கு.

(16041)

உன் நினைவுடன்,
குடும்பத்தினர்.


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2859

### பிரசாந்தி

குப்பையை நோக்கி சென்ற உரல்கள்.



மருத்துமனை நோக்கி சென்ற உடல்கள்...!

### மதுசன்

மனைவி:-உங்களைப் பார்த்துக்கிட்டே இருக்கனும் போல இருக்குங்க...



கணவன்:- அப்பவே ஜோசியர் சொன்னாரு கல்யாணத்துக்கு அப்புறம் "சனி பார்வை" உங்க மேலேயே இருக்கும்னு...

### பிரியங்கா

மனைவி :- ஏங்க! புண்ணியம் செய்தவர்களை இங்கிலீஷ்ல எப்படி சொல்லுவாங்க?

கணவன் :- Unmarried னு சொல்லுவாங்க...

மனைவி :- யோவ்-நில்லுய்யா ஓடாத!!



### டிலான்

எரும பால் வாங்கிட்டு வாடான்னு அம்மா சொன்னாங்க...



ஊர் முழுக்க தேடிப்பார்த்து எங்கேயும் கிடைக்கலன்னு அம்மாட்ட சொன்னேன்... அப்புறம் தான் தெரிஞ்சுது அம்மா எருமைன்னு சொன்னது என்னை என்று!

### நிதுஷா




### ராகவ்

மார்சி மாசம் அப்புறமா என்னடா வரும்?



ஆனான பொண்ணு மாமன் உனக்கு தானே... என்று வரும்....

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 211





சற்று வளைந்து தாழ்ந்திருந்த மூங்கில் மரக்கிளை ஒன்று அவனுடைய தலைமயிரில் சிக்கிக் கொண்டது. குதிரை முன்னால் இழுக்கவும் அந்தப் பிள்ளையின் கதி என்ன ஆகுமோ என்று இருந்த நிலையில் பின்னால் வந்தவர்கள் அக்குதிரையை வந்து பிடித்துக் கொண்டார்கள்.

குதிரை மீது வைத்துக் கட்டியிருந்த பிள்ளையைப் பார்த்து வியப்பும் திகைப்பும் கோபமும் அடைந்தார்கள். ஏதோ அவனைக் கேட்டார்கள். அவன் தட்டுத் தடுமாறி மறுமொழி சொன்னான். விவரமாக ஆழ்வார்க்கடியான் காதில் விழவில்லை. "அவன் எங்கே?" "அவன் எங்கே?" என்று அடிக்கடி பலமுறை கேட்ட கேள்வி காதில் விழுந்தது. அந்த இளம் பிள்ளை "ஆற்றோடு போய் விட்டான்!" "வெள்ளத்தில் விழுந்து விட்டான்!" என்று விம்மி அழுது கொண்டே சொன்னதும் காதில் விழுந்தது. பிறகு அவ்வீரர்கள் அந்தப் பையனையும் குதிரையையும் தங்களுடன் அழைத்துக் கொண்டு ஆற்றங்கரையோடு போய் விட்டார்கள்.

இந்தச் சம்பவத்தின் பொருள் என்னவென்பது திருமலையப்பனுக்கு அச்சமயம் விளங்கவில்லை. இப்போது கொஞ்சம் விளங்குவது போல் தோன்றியது.

இதற்கிடையில், அந்த வீதி நாடக கோஷ்டியின் நினைவும் அவனுக்கு வந்தது. முக்கியமாக, கம்ஸன் வேஷம் தரித்து, மரப் பொம்மை முகத்தினால் சொந்த முகத்தை மறைத்துக் கொண்டிருந்தவனின் நடை உடை பாவனைகளும், குரலும் நினைவு வந்தன. முன்னம் கேட்டது போல் தொனித்த அக்குரல் யாருடைய குரல் என்பது பற்றியும் விளக்கம் ஏற்படத் தொடங்கியது.

இரவு அர்த்த ஜாம பூஜையை முடித்துக் கொண்டு ஈசான சிவபட்டர் தம் இல்லத்துக்கு வந்தார். வாசல் திண்ணையில் ஆழ்வார்க்கடியான் படுத்திருப்பதைப் பார்த்தார்.

"திருமலை! திருமலை!" என்று கோபக் குரலில் கூப்பிட்டார். திருமலை நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருப்பதாகப் பாசாங்கு செய்தான்.

வீட்டுக் கதவைப் படார் என்று சாத்திக் கொண்டு பட்டர் உள்ளே போனார். தமது மனைவியாருடன் அவர் சண்டை பிடிக்கிற தோரணையில் பேசியது அரைகுறையாகத் திருமலையின் காதில் விழுந்தது. தன்னைப் பற்றித்தான் சண்டை என்பதைத் திருமலை தெரிந்து கொண்டான்.

காலையில் எழுந்ததும் ஈசான சிவபட்டர் திருமலையிடம் வந்து, "மறுபடி நாடு சுற்ற எப்போது புறப்படுகிறாய்?" என்று கேட்டார். "தங்கள் கோபம் தணிந்த பிறகு புறப்படுவேன் அண்ணா!" என்றான்.

"இனி என்னை 'அண்ணா' என்று கூப்பிடாதே. இன்று முதலாவது நான் உன் தமையனும் அல்ல நீ என் தம்பியும் அல்ல. நீ சிவத்துவேஷி நீசன் சண்டாளன்"

பட்டரின் மனைவி திருமலைக்காகப் பரிந்து, "எதற்காக இப்படியெல்லாம் அவனைச் சபிக்கிறீர்கள்! இத்தனை நாளும் சொல்லாததை அவன் இப்போது என்ன புதிதாகச் சொல்லி விட்டான்! உங்களுக்குத்தான் சிவபக்தி ரொம்ப அதிகமாக முற்றி விட்டது!" என்றாள்.

"உனக்கு ஒன்றும் தெரியாது! அவன் நேற்று பெரிய மகாராணியின் முன்னிலையில் என்னவெல்லாம் சொன்னான் தெரியுமா? 'சுடுகாட்டில் சாம்பரைப் பூசிக் கொண்டு திரியும் பரமசிவனுக்குக் கோவில் என்னத்திற்கு!' என்று கேட்டான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கலைமானும் கரடியும்



கலைமான் ஒன்று தன் இரண்டு குட்டிகளுடன் அடர்ந்த காட்டுக்குள் இரை தேடி அலைந்து கொண்டிருந்தது. மாலை நேரத்தில் இருப்பிடம் திரும்பும் வேலை வந்ததும் குட்டிகளை அழைத்துக் கொண்டு புறப்பட்டது.

அப்போது கலைமான் குட்டிகளில் ஒன்று காட்டுக்குள் வழி தவறிவிட்டது. அந்தக் காட்டுக்குள் சிறிது தூரம் தன் தாயைத் தேடியது. ஆனால் தாயையும் உடன் பிறந்த மற்றொரு குட்டியையும் அதனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

பின்னர் அது காட்டின் ஒரு ஓரமாக நின்று கண்களில் கண்ணீர் பொங்க அழுது கொண்டிருந்தது. அந்த நேரத்தில் அந்த வழியாக கரடிக் குட்டி ஒன்று அங்கு வந்தது. அது கலை மான் குட்டியிடம் எதற்காக அழுகிறாய் என்று கேட்டது.

கலைமான் குட்டியும் தன் சோகக் கதையைக் கூறியது. பரிதாபம் கொண்ட கரடிக் குட்டி, கலைமான் குட்டியைத் தன்னுடன் தான் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றது.

[illegible]

களாக இருந்து தங்களின் சிறு வயது காலத்தைக் கரடிக் குட்டியும் கலைமான் குட்டியும் சந்தோஷமாக கழித்து வந்தன.

கலைமான் வளர வளர அதற்கு அழகிய கொம்பு முளைத்தது. அதன் காரணமாக அது பார்ப்பதற்கு மிகவும் அழகாக தோன்றியது. கலைமானைப் பார்த்த மற்ற விலங்குகள் அதன் அழகை பாராட்டிச் சென்றன. இதனால் கலைமானுக்கு கர்வம் உண்டானது.

அது மற்ற எந்த விலங்குகளையும் மதிக்காமல், ஏளனமாகப் பார்க்கத் தொடங்கியது. இதனால் வரை தனக்கு அடைக்கலம் கொடுத்து, தன்னுடன் உயிருக்கு உயிராகப் பழகி வந்த கரடியிடமும் அது தன் அழகின் கர்வத்தைக் காட்ட ஆரம்பித்தது. கரடியே! நீ என்னைப் போல் அழகாக இல்லை. உன் முகத்தைப் பார்க்கவே அசிங்கமாக இருக்கிறது. ஆனால் என்னைப் பார் இயற்கையிலேயே அழகான எனக்கு, இப்போது வளர்ந்துள்ள கொம்புகள மேலும் அழகு சேர்க்கின்றன.

இப்போது உன்னை என் நண்பன் என்று சொல்லிக் கொள்ளவே எனக்கு வெட்கமாக இருக்கிறது. எனக்கு நண்பனாக இருக்க, என்னைப் போல் அழகு படைத்தவரே தகுதியானவர்கள். உனக்கு அந்தத் தகுதி கொஞ்சமும் இல்லை என்றது கலைமான்.

இதைக் கேட்ட கரடிக்கு முதலில் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. இருந்தாலும் அதனை வெளியே காட்டிக் கொள்ளாமல் கலைமானே! உனக்கு உன் கொம்புகள் மிகுந்த அழகு தான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் !

– மகாகவி பாரதி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எம் வாழ்வியலாக அமைந்த தமிழை இழந்து வாழ்வது ஒரு வாழ்வா!

பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் என்கிறது கலித்தொகை.

தமிழில் பண்பு என்ற சொற்பதம் தரவல்ல கருத்து ஆழமானது. எம் வாழ்வியலோடு இரண்டறக் கலந்தது.

பண்பில் இருந்து தோன்றிய பண்பாடு என்பது நம் தமிழ் இனத்தின் பெருமைக்கு அடிப்படையாக அமைவது.

ஆம், பண்பாடு என்பதற்கு வள்ளுவன் சால்பு எனக் குறித்துரைக்கின்றான்.

ஆக, தமிழர்களின் பெருமையைத் தாங்கி நிற்கும் தூணாக விளங்குகின்ற பண்பாடு என்பது தமிழர் வாழ்வியலின் இலக்கணம் எனலாம்.

ஆம், உலகின் மூத்த மொழியாகிய தமிழைத் தனித்து மொழியாகப் பார்த்தலாகாது. மாறாக தமிழ் என்பது ஒரு உன்னதமான வாழ்வு என்றும் பொருள் கொள்ளல் வேண்டும்.

உண்மை. ஆதிக்குடிகளாகிய நம் தமிழ்க் குடிகளின் வாழ்வு என்பது அன்பும் அரவணைப்பும் பாசமும் இறை நம்பிக்கையும் கொண்டது.

எனவே சமகாலத்து மொழி நிலைகளில் நின்று கொண்டு தமிழையும் தமிழரின் வாழ்வியலையும் மதிப்பீடு செய்துவிடக்கூடாது.

ஏனெனில் எங்கள் தமிழ் மொழி பண்புடைச் சொற்களின் மூலம் மனிதநேயத்தை, அன்பை, நேர்மையை, நீதியை, வாய்மையை, நடுவுநிலைமையை வெளிப்படுத்துவது.

எனினும் சமகாலத்தில் நம் பிள்ளைகள் பண்புடைமைச் சொற்களைத் தவிர்த்து வருவதுடன் அடிப்படை இலக்கணப் புரிதல் இன்றிப் பேசவும் எழுதவும் பழகிவருகின்றனர்.

இவ்வாறான போக்கு எதிர்காலத்தில் எங்கள் மூத்த தமிழ் மொழிக்கு ஆபத்தாக அமைந்துவிடும்.

பொதுவில் தமிழ் என்பது ஈழத்தில் மட்டுமே பிழையறப் பேசப்படுகிறது என்ற கணிப்பு உண்டு.

ஆயினும் அந்தக் கணிப்பு விரைவில் பொய்த்துவிடும் போல நிலைமை உள்ளது.

எனவே தமிழன் வாழ வேண்டுமாயின், தமிழ் மொழி வாழ வேண்டும்.

தமிழ் தெரியாத தமிழனால் ஆகப் போவது எதுவுமில்லை.

பொதுவில் புலம்பெயர் நாடுகளில் வாழுகின்ற நம் உறவுகளில் பெரும்பாலானவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தமிழைக் கற்றுக் கொடுக்கவில்லை.

இதனால் அவர்கள் தமிழைப் பேசத் தெரியாத தமிழர்களாக இருக்கப் போகிறார்கள்.

ஆகவே எங்கள் மண்ணில் தமிழ் மொழியை அழகுறப் பேசுவது மிகவும் முக்கியமானது.

அதேநேரம் புலம்பெயர் நாடுகளில் உள்ள எம் தமிழ் உறவுகளின் பிள்ளைகள் தமிழ் கற்பதற்கும் தமிழ் மொழியில் சரளமாகப் பேசுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இல்லையேல் எங்கள் செம்மொழி காலாவதியாகி விடுகின்ற பேராபத்தை கடந்தேற முடியாமல் போய்விடும்.

# ஐ.எம்.எப் உடனான கலந்துரையாடலில் எதிர்க்கட்சியையும் இணைக்க வேண்டும்

### பாராளுமன்றில் சஜித் பிரேமதாச

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுடனான கலந்துரையாடல்களில் எதிர்க்கட்சிகளையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நேற்றுய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலஞ்ச ஊழல் சட்ட மூலத்தில் பெரும் குறை உள்ளது. அபகரிக்கப்பட்ட நாட்டின் சொத்துக்களை மீள பெற்றுக் கொள்ளும் விதிகள் இதில் உள்ளடக்கப்படவில்லை.

நாம் ஆட்சிக்கு வந்தவுடன் இந்த செயற்பாட்டை சரியான முறையில் முன்னெடுப்போம். ஐ.எம்.எப். உடனான அதிகாரிகள் மட்டக் கலந்துரையாடலில் எம்மை அரசாங்கம் இணைத்துக் கொள்ளவில்லை.

எம்மையும் சேர்த்துக் கொண்டால் நாமும் அரசாங்கத்துக்கு ஒரு பலமாக இருப்போம்அல்லவா? நான் ஒரு விடயத்தை இங்கே கூறுகிறேன். உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்கு செல்ல வேண்டாம் என எதிர்க்கட்சியினர் உள்ளிட்ட 225பேரும்ஐ.எம் எப் ஐ வலியுறுத்துவோம்.

இதனை மேற்கொள்ள அரசாங்கத்திற்கு முதுகெலும்பு உள்ளதா? இதனை ஏன் கூற முடியாது. இதற்கு என்ன பதில்?

இதோ எமது தீர்வு. இப்போது என்ன கூறுகின்றீர்கள். உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பாக ஐ.எம்.எப். என்ன கூறுகிறது?

அதாவது, உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை கவனமாகமேற்கொள்ளவேண்டும் என்று கூறுகிறது. ஐ.எம்.எப்.புடன் மீள் பேச்சு வார்த்தைக்கு செல்ல வேண்டும். அரசாங்கம் இந்த சவாலை பொறுப்பேற்க வேண்டும்.

அரசாங்கம் இந்த சவாலை பொறுப்பேற்றால் எதிர்க்கட்சியாக நாமும் ஒத்துழைப்பு வழங்க தயாராகவே உள்ளோம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# இராணுவ வாகனம் மோதி 3 வயது சிறுமி மரணம்

(பண்டாரகம)

இராணுவ பஸ் மோதியதில் 3 வயது சிறுமி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக பண்டாரகம பொலிஸார் தெரிவிக்கின்றனர். சிறுமியின் தாயாரும் பலத்த காயங்களுடன்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, ரைகம கெலேகடே வீதி பகுதியில் வசித்து வந்த இசுதி தெனெத்மா சுபசே என்ற மூன்று வயது சிறுமியே விபத்தில் உயிரிழந்தவராவார்.

பண்டாரகம கூட்டுறவுச் சங்கத்தின் பிரதான காரியாலயத்தின் கணக்காளராக பணியாற்றும் சிறுமியின் தாயார் சிறுமியுடன் ஸ்கூட்டரில் அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்த போது பண்டாரகம கூட்டுறவுச் சங்க அலுவலகத்திற்கு முன்பாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

களுத்துறையில்இருந்து இராணுவத் தலைமையகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் ஊழியர்களை ஏற்றிச் சென்ற இராணுவ பேருந்தே இவர்கள் மீது மோதியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த சிறுமியையும் அவரது தாயையும் உடனடியாக பிரதேசவாசிகள் பண்டாரகம மாவட்ட வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற போதிலும் சிறுமி ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-7)

### 67 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள்

# டெங்கு அதிகம் பரவும் அபாய வலயங்களாக பிரகடனம்

(கொழும்பு)

67 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதனிடையே கொழும்பு மாவட்டத்தை மையமாகக் கொண்டு விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் சமூக வைத்திய நிபுணர் லஹிரு கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை, கொத்தட்டுவை, மஹரகம ஆகிய டெங்கு அபாயம் அதிகம் காணப்படும்சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவுகளில் இந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்துடன்இணைந்து இந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை** கிளிநொச்சி பிரதேசத்தில் மாங்குளம் பாடசாலையடியிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஆசிக்குளம்,மகாறம்பைக்குளம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ்தொழிற்சாலை, பெரியகரைசல் பல்மெய் ராஹவுஸ் தலைமன்னார், தலைமன்னார் வைத்தியசாலை, கலைமன்னார் கடற்படைமுகாம், வங்காலைப்பாடு செண்டார்ட்ஸ் தொழிற்சாலை ,பேசாலை ஐஸ் தொழிற்சாலை, Grotto of lady lourds church பேசாலை , கட்டுகாரங்குடியிருப்பு, கரைசல் திட்டம்,கீழியங்குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், படப்பாடி நீர் வழங்கல், பருத்திப் பண்ணை , பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரியகரைசல், பேசாலை, சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, தலைமன்னார், தலை மன்னார் கப்பல் வீடமைப்புத்திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், துள்ளுகுடியிருப்பு தும்புத் தொழிற்சாலை , துள்ளுகுடியிருப்புத் திட்டம், வங்காலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும்மின்சாரம்தடைப்படும்.

# அதிகரிக்கும் வன்முறைகளால் முதலீட்டாளர்கள் அச்சம்

### முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர்

துப்பாக்கிப் பாவனையினால் அதிகரித்து வரும் கொலைகள் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக குற்றவியல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்த முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

தனியார் நிகழ்ச்சி ஒன்றில் வழங்கிய நேர்காணலில் வெளிநாட்டவர்கள் இந்நாட்டில் முதலீடு செய்யும் போது நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதாகத் தெரிவித்திருந்தார்.

2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலைகளின் எண்ணிக்கையை விடவும்இவ்வருடம்இதுவரை அதிக எண்ணிக்கையிலான மனிதக் கொலைகள் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் சமூகத்தின் பாதுகாப்பு அழிந்து வருவதாகவும் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)

# அனலைதீவு ஐயனார் ஆலய புதிய பரிபாலனசபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

அனலைதீவு ஐயனார் ஆலய புதிய பரிபாலன சபை தெரிவு கடந்த 6 ஆம் திகதி ஆலயத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் போது தெரிவுசெய்யப்பட்டது.

இதன்போது பரிபாலன சபைத் தலைவராக அ.பரஞ்சோதி,செயலாளராக ச.நிரோஜன்,பொருளாளராக ச.சிவபாலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (4)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை, இசைத்துறை, உயர்பட்டப் படிப்புகள் பீடம் மற்றும் சைவ சித்தாந்த முதுமாணிக் கற்கை அணி - VII இணைந்து நடத்தும் திருவாசக முற்றோதல் இன்று வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரர் ஆலயத்தில் காலை 8 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக விசாரணையில் ஒருபோதும் நீதி கிடைக்காது



## கஜேந்திரகுமார் எம்.பி

(கொழும்பு)

பொறுப்புக்கூறல் விவகாரத்தில் இலங்கை மந்தகரமாகவே செயற்படுகிறது. சுதந்திரமான விசாரணை முன்னெடுக்கப்படுவது சந்தேகத்துக்குரியது என்பதை உலக நாடுகள் இன்று ஏற்றுக்கொண்டுள்ளன.

உள்ளக விசாரணையில் ஒருபோதும் நீதி கிடைக்காது என்பதை தொடர்ந்து வலியுறுத்துகிறோம் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தீவிரமடைந்துள்ள ஊழல் மோசடியால் இலங்கை புகழோடு வீழ்ச்சி நிலைக்கு செல்கிறது. நீதிதுறையின் பாதுகாப்பு மற்றும் சுயாதீனத்தன்மை தொடர்பில் பாரிய சந்தேகம் காணப்படுகிறது.

இயற்றப்படும் சட்டங்களினால் சமூகக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா 'என்பதை அவதானிக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் தற்போது இடம் பெறுகிறது.

பொறுப்புக் கூறல் விவகாரத்தில் இலங்கை மந்தகரமாகவே செயற்படுகிறது. சுதந்திரமான விசாரணை முன்னெடுக்கப்படுவது சந்தேகத்துக்குரியதே என உலக நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டினார். (நி)

# கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் நிர்மாணப் பணிகள் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தின் நிர்மாணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி காரணமாக விமான நிலையத்தின் இரண்டாவ்து முனையத்தின் 'நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன.

ஜப்பானின் ஜய்க்கா நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கடனுதவி இடைநிறுத்தப்பட்டமையே இதற்கான காரணமென தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் பின்னணியில், கட்டுநாயக்க விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தின் நிர்மாணப் பணிகளை இலங்கை அரசாங்கம் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

ஜப்பான் விமான நிலைய ஆலோசனை நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் இலங்கை எக்சஸ் நிறுவனம் இந்த நிர்ம்மாண பணிகளை மேற்கொண்டு வருவதாக இலங்கை துறைமுக, கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. இதேவேளை, இந்த நடவடிக்கைக்காக 500 மில்லியன்ரூபாய், விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தால் செலவிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 160 | 200 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 180 | 220 |
| பச்சைமிளகாய் | 550 | 500 | 600 | 600 |
| தக்காளி | 250 | 250 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 240 | 250 |
| கோவா | 280 | 260 | 250 | 300 |
| கரட் | 300 | 400 | 420 | 450 |
| பூசணி | 100 | 80 | 100 | 100 |
| புடோல் | 150 | 140 | 180 | 200 |
| வாழைக்காய் | 100 | 160 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 420 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 140 | 150 |
| பாகற்காய் | 500 | 400 | 400 | 600 |
| வெண்டக்காய் | 280 | 160 | 120 | 400 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 200 | 300 |
| பயற்றங்காய் | 450 | 450 | 350 | 300 |
| லீக்ஸ் | 360 | 280 | 350 | 350 |
| பீற்றூட் | 450 | 300 | 200 | 450 |
| கறிமிளகாய் | 400 | 350 | 350 | 400 |
| முருங்கைக்காய் | 600 | 700 | 600 | 800 |
| போஞ்சி | 550 | 500 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 50 | 80 | 60 | 80 |
| தேசிக்காய் | 350 | 300 | 350 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 90 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 450 | 500 | 400 | 800 |
| முள்ளங்கி | 140 | 160 | 200 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 35 | 40 | 60 |
| ஈரப்பலா | 180 | 200 | -- | 200 |

# ஆனி மாத இராசி பலன்கள் 16.06.2023-16.07.2023

## கும்பம்

**உழைப்பால் உயர முடியும் என்று சொல்லும் கும்ப இராசி வாசகர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத்தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி, உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். கடகத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய், சனியைப் பார்ப்பதால் திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடி முடியாது. திடீர் விரயங்கள் அதிகரிக்கும். ஒட்டி உறவாடிய நண்பர்கள் உங்களை விட்டு விலகுவர். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் இணக்கம் குறையும். எதையும் சிந்தித்து செயல்படுவதன் மூலம் செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். மருத்துவச் செலவு அதிகரிக்கலாம்.

**மிதுன - புதன்**

ஆனி 3 ஆம் திகதி, மிதுன இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியானவர் புதன். அவர் பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு வரும்போது பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும். குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி நீங்கள் தீட்டிய திட்டங்கள் வெற்றிபெறும். க்ல்யாண முயற்சி கைகூடலாம். "படித்து முடித்தும் வேலை இல்லையே" என்று கவலைப் பட்டவர்களுக்கு இப்போது வேலை கிடைக்கும். பூர்வ புண்ணியத்தின் பலனாக, சொத்துக்கள் சம்பந்தமான பிரச்சினை சுமுகமாக முடியும். பூமி விற்பனை மூலம் வரும் இலாபத்தைக் கொண்டு தொழிலை விரிவு செய்ய முயற்சிப்பீர்கள்.

**சிம்ம - செவ்வாய்**

ஆனி 17ஆம் திகதி, சிம்ம இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அப்போது குருவின் பார்வை செவ்வாய் மீது பதிகின்றது. எனவே "குரு மாங்கல யோகம்" ஏற்படுகின்றது. இதனால் சுபகாரியங்கள் நடைபெறும். விலகிச்சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்திணைவர். குருவின் பார்வை பதிந்த செவ்வாய், சனியைப் பார்ப்பதால் ஆரோக்கியத் தொல்லை அகலும். பூர்வீக சொத்துகளை விற்று புதிய சொத்துகளை வாங்கும் யோகம் சிலருக்கு உண்டு. வெளிநாட்டில் இருந்து தாய் நாட்டிற்கு வரமுடியாமல் தத்தளித்தவர்களுக்கும், தாய் நாட்டிலிருந்து வெளிநாட்டிற்கு செல்லமுடியாமல் தத்தளித்தவர்களுக்கும் இப்பொழுது வழிபிறக்கும். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து வருமானம் கூடும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும்.

**சிம்ம - சுக்கிரன்**

ஆனி 18ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். இதன் விளைவாக "சுக்கிர மாங்கல யோகம்" நடைபெறுகின்றது. குருவின் பார்வை செவ்வாய் மற்றும் சுக்கிரன் மீது பதிவது யோகம்தான். சொத்துத் தகராறுகள் அகலும். சொந்தங்கள் ஆச்சரியப்படும் அளவிற்கு முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் பணிநிரந்தரம் பற்றிய தகவல் வரலாம். உள்ளத்தில் உறுதியோடு செயற்படுவீர்கள். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைத்து மகிழ்ச்சி அதிகரிக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம்.

**கடக - புதன்**

ஆனி 19 ஆம் திகதி, கடக இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு பஞ்சம - அஷ்டமாதிபதியானவர் புதன். இப்போது அஷ்டமாதிபதி 6 ஆம் இடத்திற்கு வருவது யோகம்தான். கடன்சுமை குறையும். கவலைகள் தீரும். "இடம், வீடு இல்லையே" என்று கவலைப் பட்டவர்களுக்கு, இப்போது அவற்றை வாங்கும் யோகம் உண்டு. படிப்படியாக முன்னேற்றம் காண்பீர்கள். பரந்த மனப்பான்மை கொண்ட சிலரால் நிரந்த வருமானத்திற்கு வழிபிறக்கும். தொழிலில் எதிர்பாராத லாபம் கிடைக்கும். பயணங்கள் பலன்தரும் விதம் அமையும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் மட்ட அதிகாரிகளின் ஆதரவு உண்டு. பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு தடைப்பட்ட பதவி தானாக கிடைக்கும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வீடு தேடிவரும். மாணவ-மாணவிகளுக்கு மறதி அதிகரிக்கும். பெண்க[illegible] தூக்கும். நேர்[illegible] துக்கொள்வது நல்லது.

## மீனம்

**உதவும் குணத்தால் உள்ளத்தில் இடம் பிடிக்கும் மீன இராசி வாசகர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு ராகுவும் இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே பொருளாதாரம் சிறப்பாகவே இருக்கும்.

**மிதுன - புதன்**

ஆனி 3 ஆம் திகதி, மிதுன இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் தன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் பொழுது சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும். மேலும் அவர், சூரியனோடு இணைந்து "புத ஆதித்ய யோக"த்தை உருவாக்குவதால் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய திருப்பங்களும் பதவிகளும் ஏற்படும். பிள்ளைகள் வழியில் சுபகாரியம் கை கூடும்.

**சிம்ம - செவ்வாய்**

ஆனி 17 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அப்பொழுது குருவின் பார்வை செவ்வாய் மீது பதிகின்றது. எனவே "குருமங்கல யோகம்" ஏற்படுகிறது. சுபச்செலவு அதிகரிக்கும். தொழில் ரீதியாக எடுத்த புதுமுயற்சி கைகூடும். உத்தியோகத்தில் உயர்பதவி கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். குருவின் பார்வை பதிந்த செவ்வாய் சனியைப் பார்ப்பதால் இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான சூழ்நிலை உருவாகும். படித்து முடித்து வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்களும் வந்துசேரும். புதிய வாகனம் வாங்கி பயணிக்கும் யோகம் உண்டு.

**சிம்ம - சுக்கிரன்**

ஆனி 18 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் வருகிறார். அவர் அங்குள்ள செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மாங்கல யோக"த்தை உருவாக்குகிறார். இதன் விளைவாக குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவம் நடைபெறும். கொடுக்கல் - வாங்கல்கள் சரளமாக இருக்கும். பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். பெற்றோருடன் இருந்த பிரச்சினைகள் அகலும். கற்ற கல்விக் கேற்ற வேலை கிடைக்கும். கண்ணியமிக்க நண்பர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவர். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்குப் பொறுப்புகள் கூடும். புதிய பதவிகள் கிடைக்கும் யோகம் உண்டு. தொழிலில் பழைய பங்குதாரர்களை விலக்கிவிட்டு புதியவர்களை சேர்க்க முன்வருவீர்கள்.

**கடக - புதன்**

ஆனி 19 ஆம் திகதி, கடக இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். பற்றாக்குறை பட்ஜெட் மாறும். திரும்பிச் சென்ற வரன்கள் மீண்டும் வரலாம். சுபவிரயங்கள் அதிகரிக்கும் நேரமிது. உடல்நலத்தில் மட்டும் கொஞ்சம் கவனம் தேவை. புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. பங்கு வர்த்தகங்களால் பலன் கிடைக்கும். வெளிநாட்டு முயற்சி கைகூடும். பிள்ளைகளின் வேலைவாய்ப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு மக்கள் செல்வாக்கு அதிகரிக்கும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த இலாபம் எளிதில் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணிச் சுமை அதிகரிக்கும். கலைஞர்களுக்கு புகழும் அந்தஸ்தும் உயரும். மாணவ-மாணவிகளுக்கு கூடுதல் மதிப் பெண் பெற எடுத்த முயற்சி வெற்றி பெறும். பெண்களுக்கு இல்லம்தேடி நல்ல தகவல் வரலாம். சுப காரியங்கள் கைகூடும். தாய் வழி ஆதரவு உண்டு. பணிபுரிபவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லையில்...

லம் ஒன்று காணப்படுவதாக வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலம் அடையாளம் காண முடியாத அளவுக்கு உருக்குலைந்து காணப்படுகிற நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33,60,104)

## ஹிட்லர் போன்று...

பாராளுமன்றில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதியிடம் நான் ஒன்றை கூறிக்கொள்ள வேண்டும். வாக்குகளுக்கு ஆசைப்பட்டு, இந்நாட்டின் தொல்பொருட் சின்னங்களில் கைவைக்க வேண்டாம். இது நாம் காலாகாலமாக பாதுகாத்து வந்த எமது சொத்துக்களாகும்.

இதில் கை வைத்தால் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

அத்தோடு, அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிடும் சட்டங்களை கொண்டு வந்து, ஹிட்லர் போன்றுதான் ஜனாதிபதி இன்று செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்த நாட்டில் இன்று பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. கடந்தாண்டு மட்டும், 11 ஆயிரத்து 500 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தாண்டின் முதல் 5 மாதங்களில் மட்டும், 38 துப்பாக்கிப் பிரயோக சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. நேற்று முன்தினம் மட்டும், 3 துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நாட்டு மக்களுக்கு இவ்வாறு பாதுகாப்பே இல்லாத நிலையில்தான், அரசாங்கம் நாட்டை முன்னேற்றிக் கொண்டிருப்பதாக மார் தட்டிக் கொண்டிருக்கிறது.

இப்படியான தரப்பினருடன் இணைந்து, நாட்டை முன்னேற்ற நாம் ஒருபோதும் தயாராக இல்லை" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## யாழ். - மதுரை...

நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டின் சுற்றுலாத்துறை முன்னேற்றத்திற்கு விமான சேவைகள் மற்றும் கப்பல் துறை மூலம் பெரும் பங்களிப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் வடக்கில் காங்கேசன்துறை துறைமுகத்தில் அரசாங்கத்தின் செலவில் 450 மில்லியன் ரூபாய் செலவில் முனையத்திற்கான கட்டிட நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுள்ளன.

காங்கேசன்துறைக்கான முதலாவது கப்பல் அண்மையில் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்தது. இந்தியாவின் சுற்றுலாப் பயணிகள் சுமார் 500 பேருக்கு அதிகமானோர் அதில் வருகை தந்திருந்தனர்.

இந்தக் கப்பல் சேவையை வாரத்திற்கு ஒரு முறை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு இது சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது.

வடக்கு மக்களுக்கு அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிக்கிணங்க பலாலி விமான நிலையத்தை நாம் நிர்மாணித்து வழங்கியுள்ளோம்.

வாரத்திற்கு நான்கு தினங்கள் விமான சேவைகள் இடம்பெறுகின்றன. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரை விமானப்பயணச் சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. அந்த விமான சேவையை 7 நாட்களுக்கும் தொடர்வதற்கு நாம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

வேறு விமான சேவை நிறுவனங்களும் விமான சேவைகளை முன்னெடுப்பதற்கு முன்வந்தால் அதற்கு அனுமதி வழங்கவும் நாம் தயாராகவுள்ளோம்.

சென்னைக்கும் பலாலிக்குமிடையில் அந்த விமான சேவைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பாரிய விமானங்களை அங்கு தரையிறக்கும் வகையில் விமான ஓடுபாதை

களை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

அது தொடர்பில் நாம் சம்பந்தப்பட்டவர்களுடன் கடந்த வாரம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். அதற்கான முன்னோடி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## அதிகாரப் பகிர்வு...

கையில்,

அதிகாரப்பகிர்வு தொடர்பான கலந்துரையாடல்கள் மூலம் சாத்தியமான தீர்வுகள் வெளிவந்துள்ளன. அவற்றை நான் தமிழ் அரசியல் கட்சிகளிடம் சமர்ப்பித்துள்ளேன்.

நான் பிரதமராக பதவிவகித்த வேளை நல்லிணக்கம் தொடர்பான செயற்பாடுகளை நான் ஆரம்பித்தேன் அன்று முடித்த இடத்திலிருந்து நான் தற்போது தொடர்கின்றேன். தமிழர் பகுதிகளை பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நான் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளேன். பலவிடயங்கள் குறித்து இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் சட்ட மூலத்தை உருவாக்கியுள்ளோம்.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளோம், இந்த சட்டமூலம் தொடர்பில் அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிகளிற்கும் இடையில் மூன்று விடயங்கள் தொடர்பில் கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன. இவற்றில் இரண்டிற்கு தீர்வை கண்டுள்ளோம். வடக்குக் கிழக்கில் காணப்படும் காணிதொடர்பான விவகாரங்களிற்கு தீர்வை காண்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம், காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அதிகாரப் பகிர்வு தொடர்பான கலந்துரையாடல்கள் மூலம் சாத்தியமான தீர்வுகள் வெளிவந்துள்ளன. அவற்றை நான் தமிழ் அரசியல் கட்சிகளிடம்சமர்ப்பித்துள்ளேன் ஜூலை மாதத்திற்குள் முழுமையான செயல் முறையை சமர்ப்பிக்க எண்ணியுள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோர் அலுவலகநடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ம-7)

## பொருட்...

அமுலாக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாக, நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய உற்பத்தியாளர்களிடம் இருந்து கிடைக்கப்பெறவேண்டிய நன்மைகள் இன்னும், பொதுமக்களை சென்றடையவில்லை.

மின்கட்டணம் மற்றும் வங்கி வட்டி வீத அதிகரிப்பு போன்ற காரணங்களால், இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனினும், நாம் தற்போது கொண்டு வந்துள்ள பொருளாதார முன்னேற்றமானது, ஒருவழியிலேனும் அவர்களுக்கு நன்மையை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக, சிமெந்து, மாபிள், இரும்பு, கோழி இறைச்சி மற்றும் வெதுப்பக உற்பத்திகளின் விலைகளை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாக, அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.(ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 22/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1608
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 7 4 3 5 9 5
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.06.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1183
C 09 51 63 81
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.06.22
சீட்டிழுப்பு இலக்கம் 3395
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
B 03 37 46 62
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 22/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1501
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
M 06 37 53 60 74

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.22
சீட்டிழுப்பு இலக்கம் 462
வெற்றி இலக்கங்கள்
தனுசு 01 05 17 23 தனுசு
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/22
சீட்டிழுப்பு இலக்கம் 5153
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
L 2 7 1 1 3 9
தேசிய லொத்தர் சபை

ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 1953
வர்ணம் : இளம் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.06.22
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.53,147,468.40
வெற்றி இலக்கங்கள்
12 26 32 77 K
DLB

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 604
திகதி 2023-06-22
வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 27 48 58
விதி எண் 05
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 20,985,040.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே. : 0112 333 548/47
Web: www.dlb.lk

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 22 10 12 16 61
சுப்பர் இலக்கம்
1303
2023.06.22
வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 339,965,490.60
DLB DEVELOPMENT LOTTERIES

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 2023-06-22
வெற்றி வாரம் 3839
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள்
28 33 51 56
கடகம்
DLB
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,415,760/-

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.22
வெற்றி வாரம்: 4288
வர்ணம்: சிவப்பு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,325,594.80
வெற்றி இலக்கங்கள்
05 30 48 53 U
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2127
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.06.22
தினம் வியாழக்கிழமை
A 07 27 57 73
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 4,716,300/-
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைகட்டியவெளி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஆலயம் ஒன்றுக்கு சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் 35ஆம் கொலனி, பக்கியல்ல பகுதியை சேர்ந்த சச்சி என்னும் 19 வயது இளைஞன் உயிரிழந்துள்ளதுடன், அதே பகுதியைச் சேர்ந்த ச.லோஜன் என்னும் 23 வயது இளைஞர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருவரும் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்திருந்துள்ளதாகவும் ஏனைய நபர் படுகாயமடைந்திருந்த நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## வர்த்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் ஏற்பாட்டில் BiZ FAIR -2023 வர்த்தகக் கண்காட்சி எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9 மணிமுதல் 4 மணிவரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு 021 221 7066/ 021 222 2601 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும். (4)

## வேலையாட்கள் தேவை

பிரபல உணவகமொன்றிற்கு பின்வரும் வேலைக்கு வேலையாட்கள் தேவை.
ஆண்/பெண் இருபாலாரும்

01.கணக்காளர்
02.உணவு பரிமாறுபவர்
03.பொதி செய்வோர்
04.சமையல் உதவியாளர்
05.சுத்திகரிப்பாளர்

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

(16052)

**077 609 5917**

## சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்

முல்லைத்தீவு, கிளிநொச்சி, பூநகரி, பளை பிரதேசங்களில் வாழ் மக்கள் தங்களிடமுள்ள பழுதடைந்த விவசாய, மின்சாதன, பவர்ருல்ஸ், கொங்கிறீற் மிக்சர், நமர் மற்றும் சிறு கைத்தொழில் இயந்திரங்கள் அனைத்தையும் நாளை சனிக்கிழமை (24.06.2023) இலவசமாக பழுது பார்த்து தருவதோடு எம்மிடமுள்ள அனைத்து விற்பனை சாதனங்களின் விலைகளையும் நினைக்க முடியாத விலைக்கழிவுடன் பேரம் பேசி பெற்றுக் கொள்ளலாம்.

வாருங்கள் பாருங்கள் வாங்கிச் செல்லுங்கள்

ஆர்க் என்ரபிறைசஸ் பிறைவேட் லிமிட்ட்
A9 வீதி, பரந்தன் சந்தி.

தொடர்புக்கு : 071 535 7800

(16050)

## VACANCIES

முன்னணி கல்வி நிறுவனத்தின் கிளைகளுக்கு யாழ்ப்பாணம், சுன்னாகம், சண்டிலிப்பாய், கிளிநொச்சி பிரதேசங்களில் பின்வரும் பதவி நிலைகளுக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- கணினிப்போதனாசிரியர் - NVQ Level - 4 or 5 தகைமைக்கு முன்னுருமை வழங்கப்படும் (பயிலவிரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்)
- சந்தைப்படுத்தல் உத்தியோகஸ்தர்
- சிறார்களுக்கான ஆங்கில பாட ஆசிரியர்
  G.C.E O/L ஆங்கில திறமைச்சித்தி உடன் நேரடியாக விண்ணப்பிக்கலாம் ஏனையோர் ஊதியத்துடன் 4 மாத பயிற்சியின் பின் இணைத்துக் கொள்ளப்படுவர்)

மேற்குறித்த பதவிகளில் பணியாற்ற விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

(C-6796)

DMI COMPUTER EDUCATION - No.113, Kannathiddy Road, Jaffna
WhatsApp : 0777 17 35 17

## கையடக்கத் தொலைபேசி தவறிவிட்டது

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி சிறிராம் ஜுவல்லறிக்கு முன்பு புதிய வகை ஸ்மார்ட் தொலைபேசி ஒன்று தவறிவிட்டது.(குறித்த தொலைபேசியினை ராஜா திரையரங்கத்திற்குள் இருந்து வந்த ஜோடி ஒன்று கண்டெடுத்ததும் அதை யாரிடமாவது ஒப்படைக்க முற்பட்டதும் யாரிடம் வழங்குவது எனத் தெரியாமல் குறித்த தொலைபேசியை எடுத்துச் சென்றதும் சி.சி.ரி.வி யில் பதிவாகியுள்ளது.) எனவே தொலைபேசியை கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொண்டு ஒப்படைக்கவும். (C-6797)

தகுந்த சன்மானம் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு : **077 234 9933**

## விற்பனை பிரதிநிதி தேவை

யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் மிக்சர் வகைகள் மற்றும் சொக்லேட் வகைகள் விற்பனை செய்யும் கம்பனிக்கு விற்பனை பிரதிநிதி தேவை.

குறித்த துறையில் முன் அனுபவம் மிகவும் அவசியம்

(16063)

**076 986 5238**

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

(16033)

T.P:077 544 8503

## மரண அறிவித்தல்

தோற்றம்
10 - 08 - 1944



மறைவு
22 - 06 - 2023

### திரு.கந்தவனம் அருளானந்தம்

( ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தரும்
மயூரா பூட் கோணர் (நெல்லியடி) உரிமையாளரும்)

நெல்லியடி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் இரண்டாம் குறுக்குத்தெரு பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு.கந்தவனம் அருளானந்தம் அவர்கள் நேற்று (22.06.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தவனம்- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் திருமதி புஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி முத்துக்குமாரு - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் விஜயராணி, சிவானந்தன், இதயராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அமரர் தேவச்சந்திரன், நாகேந்திரன், கலாவ்தி ஆகியோரின் மைத்துனரும் தர்மகுலசிங்கம், அமரர் திலகவதி, அமரர் விஜயரட்ணம், மல்லிகாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பகீரதன், ஜெயந்தி, மயூரதன், கிருஷாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரேமலதா, கமலகாசன், அமரர் சிவாஸ்கரன், கலைரூபி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அபிநயா, அக்சரா, துவாரகன், கதிர்ச்செல்வன், அருளினியன், அருளொளியன், தனுசிறீ, சிந்தியா, சஞ்சித், சயான் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 23.06.2023 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்
077 556 4800

(C-6799)

## KBK கணக்கீட்டு கல்லூரி

சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. | பலாலி வீதி, கந்தர்மடம்.

**A/L 2025**

(தமிழ்/ ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்)
இரு இடங்களிலும் அனுமதிகள் வழங்கப்படுகின்றன

ACCOUNTING
MR.K.BALAKAJEN SLTS
B.Com(jaf), H.N.Dip-in-Acc(ATI), Dip-in Edu (OUSL)
M.Com(Hons), ACC.Spl

A/L 2023, A/L 2024 பிரிவுக்கான துரித மீட்டல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (16055)

077 452 0043 (Whatsapp)

## பெண் சாரதி தேவை

இரண்டு சிறுவர்களை பாடசாலைக்கு கொண்டு செல்வதற்கு கார் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள பெண் தேவை.

படித்தவர்கள் விரும்பத்தக்கது

(16060)

**070 271 5121**

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✔ ONLINE APPLICATIONS
- ✔ VISA APPOINTMENTS
- ✔ PASSPORT APPLICATION
- ✔ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




(C-6798)

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport உக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்.

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

0777-068-777

## அமெரிக்க லொத்தர் விசா

V2 TRAVELS

2022ம் ஆண்டு விண்ணப்பித்தவர்களின் பெறுபேறுகள் வெளியாகி விட்டன.



அதிஸ்டசாலியாக தெரிவு செய்யப்பட்டவர்களின் அடுத்த கட்ட விசா நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன.

(C-6798)

0768226240 / 0768226241

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- ☐ பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- ☐ புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- ☐ மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ☐ வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- ☐ ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மட்டும்.
- ☐ பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- ☐ நன்னீர் ஊற்று.

(16062)

**076 755 8606**
**076 911 9371**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினால் இல.231, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.